ஸ்ரீ தன்வந்த்ரேய நம:

கவிராஜ சேகரம்

(மூன்றாம் பாகம்)

ஜி
70

இஃது

கவிராஜ சேகரம், நிகண்டு ரத்நாகரம், மதுவர்க்கம்,
பதார்த்த பஞ்சகுண மஞ்சரி, ஸஹஸ்ர ஸித்தயோகம்,
என்னும் புஸ்தகங்களின் ஆசிரியரும்,
மைலாப்பூர் ஆயுர்வேத ஸித்தாஸ்ரமம் பண்டிதருமாகிய
வைத்தியபூபதி

S. கிருஷ்ணராவ் அவர்களால்

திரட்டப்பட்டு

4297.
29407
(973)

சென்னை கிருஷ்ணம்பேட்டை
ஞானபண்டிதர் அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பெற்றது.

1933

All Rights Reserved] [Price Re

MAHARAJAH SERFOGI'S SARASWATHI ... TANJORE

ஆயுர்வேதாசார்ய
ஆத்ரேயாச்ரமம்
28. தென்னூர் ரோடு
திருச்சிராப்பள்ளி -
70
4294

முகவுரை.

—: 0 :—

கவிராஜ சேகரம்" முன்னிரண்டு பாகங்களிற் கூறிய ம், இம்மூன்றும் பாகத்திலும், அனுபவத்திற் சிறந்த முறைகள் தனித்தனி வர்க்கங்களாக வகுத்து வரையப் ளன. ஒவ்வொரு வர்க்கத்தையுந் தனித்தனிப் புஸ்த ாகப் பிரித்துக் கொள்வதற்கனுகூலமாக, முன் வர்க்கத் க்கத்தொடர்ச்சி லக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

ஆயுர்வேதமெனும் பாற்கடலைக்கடைந்து அமிர்தம்போல் ப் பட்டவைகளாயும், பிரபல பண்டிதர்கள் அனு ிலுள்ள கை முறைகளாயும், வைத்திய சாலைகளிலும், ஸ்பத்திரிகளிலும் விசேஷமாய் கையாண்டு வருகின்ற ாயும், பண்டிதர்களாலும், கவிராஜர்களாலும் விற்பனை வரும் மருந்துகளின் செய் பாகங்களாயும், சொல்ப ் யாவரும் தாங்களே செய்துக் கொள்ளும்படியானவை முள்ள வநேக உயர்தர மருந்துகளின் முறைகள் நமது ஜ சேகரமென்னுமிச் சிறு நூலில் அடங்கியிருக்கின்றன.

வர்ன்மெண்ட் இண்டியன் ஸ்கூலில் தேர்ந்தெடுக்கப் பற்பல தர்ம வைத்தியசாலைகளி லுபயோகிக்கப்பட்டு மருந்துகளுள் நமது கவிராஜ சேகரம் முதலிரண்டு களிலும், மதுவர்க்கத்திலும் முன்னரே வந்துள்ளவை தவிர்த்து மற்றவைகளையும் இம்மூன்றும் பாகத்தில் ர்களின் வேண்டுகோளுக்கிணங்கி வெளியிட்டுள்ளேன்.

ஆதார நூல்களிலுள்ள அரும்பெரும் விஷயங்களை, வேண்டுங்கால் சிரமமன்னியில் பார்த்தறிவதற்கு, படித்துணர்ந்த பண்டிதர்களுக்கும், இஃது ஏற்றதோர் வழி நூலாகுமென்பது திண்ணம். பண்டிதர்களல்லாதார்க் கோவெனில் பெரு நூல்களிலுள்ள ஸாராம்சங்களை எளிதிலுணர்ந்துக் கொள்வதற்கு இச்சிறு நூல் ஓர் சாதனமேயாகும். ஆகவே இஃது கற்றவர்களுக்கும், மற்றவர்களுக்கும் துணை நூலாகப் பொருந்துமென நம்புகிறேன்.

இங்ஙனம் :

சென்னை திருமயிலை, ஆயுர்வேத வித்தாச்ரமம். } வைத்திய பூபதி, பண்டிட், **S. கிருஷ்ணராவ்.**

காப்பு.

ஒளியே முதலா வோதுங் கிரகம்
முறுமே டமுத லீரா றுரை
வெளியே யொளிரும் விண்மீ னிருபத்
தேழும் யோகும் விளங்குந் திதியும்
நளியே சேருந் தேவுங் கணமும்
நணுகும் வருடம் மாதம் ருதுவும்
விளியே சேரா விரவும் பகலும்
வியன்மங் களமே தினமும் செயவே.

4293

மருந்துகளின் அட்டவணை

		பக்கம்
கஷாய வர்க்கம்		
கந்தர்வ ஹஸ்தாதிக்வாதம்		14
கோக்ஷுராதி	,,	13
சின்னருஹாதி	,,	,,
தசமூல கடுத்ரியாதி	,,	,,
நிம்பாதி	,,	,,
மஹா ராஸ்னாதி	,,	14
லகு ராஸ்னாதி	,,	,,
சூர்ண ப்ரகரணம்		
அச்வகந்தி	சூர்ணம்	21
அர்க்க லவணம்		19
ஐலேயகாதி	,,	26
கடுகுரோஹணி	,,	21
கோக்ஷுராதி	,,	20
சதுராம்ல	,,	26
சித்ரகாதி	,,	25
சிருங்க பேராதி	,,	22
டங்கண	,,	23
தந்ததாவன	,,	24
தாலீசாதி	,,	25
திரிகடு	,,	20
திரிபலா	,,	19
தேஜராஜ மரிசம்	,,	,,
பலி	,,	24
மதுஸ்னுஹி	,,	21
மஹா சுதர்சன	,,	23

		பக்கம்
யவான்யாதி	சூர்ணம்	26
யவானீ காண்டவ	,,	23
ராஸ்னாதி	,,	20
லாக்ஷா	,,	22
வைச்வானர	,,	20
ஸாமுத்ராதி	,,	22
ஹரித்ராதி	,,	26
ஜாதி பலாதி	,,	25
லேகிய வர்க்கம்		
அச்வகந்தி ரஸாயனம்		19
அமிர்தபல்லாதக லேகியம்		23
ஆர்த்ர கண்டாவ	,,	,,
கபித்த வில்வாதி	,,	20
குட பிப்பலி	,,	22
குண்டலாதி	,,	21
சிஞ்சாதி	,,	19
பில்வாதி	,,	,,
மஹா கந்தக ரஸாயனம்		22
,, பில்வாதி லேகியம்		20
வாஸா கண்டகாரி	,,	24
ஹிங்கு த்ரிகுண	,,	,,
க்ருத ப்ரகரணம்		
அஷ்டமங்கள	கிருதம்	17
இந்துகாந்த	,,	19
கல்யாண	,,	20
கிரகண்யந்தக	,,	19

	பக்கம்
குமார கல்யாண கிருதம்	21
சச வாஸாதி ,,	18
தாங்வந்தர ,,	19
திக்த ,,	17
பஞ்சகோல ,,	22
பல கல்யாண ,,	,,
மஹா ,, ,,	21
,, திக்த ,,	17

தைல வர்க்கம்

கந்தகத் தைலம்	19
கர்ப்பூராதித் ,,	20
குக்குலு பஞ்சக ,,	,,
தூர்வாதித் ,,	19
பிருங்காமலக ,,	,,
மஹா மாஷத் ,,	,,
விஷ முஷ்டித் ,,	20

வடக வர்க்கம்

அசோக வடி	22
அசோகாதி ,,	23
அஷடாக்ஷர குடிகா	15
கஸ்தூர்யாதி ,,	17
கோரோஜனதி ,,	19
கோரோஜனக் குளிகை	16
சந்தனதி வடி	19
சாங்கேர்யாதி ,,	23
சோதாரி மண்டூரம்	21
ச்வாஸானந்த குடிகா	18
டங்கணதி வடி	24
தாங்வந்தர ,,	16
நீரூர்யாதி ,,	17

	பக்கம்
பல்லாதக வடி	18
பில்வாதி குடிகா	15
பிரதாப லங்கேச்வரம்	20
பிருஹத் யோகராஜ குக்கு	22
புக்தஞ்ஜரி வடி	23
புநர்நவாதி மண்டூரம்	21
லோக ரஸாயனம்	24
ஜ்வர முராரி	18

மாத்திரை வர்க்கம்

அக்னி குமார வடி	43
அர்த்தநாரீஸ்வர ரஸம்	,,
இச்சாபேதி ,,	41
கர்ப்பூராதி வடி	27
காலாக்நி ருத்ர ரஸம்	32
காளகூட ,,	31
கிரஹணிவஜ்ஜிரகபாட ,,	26
சங்க வடி	31
சதுர்முக ரஸம்	35
சிலாஜது வடி	44
சீத பஞ்சீ ரஸம்	25
சுவாச குடாரம்	,,
தருணர்க்க ரஸம்	38
தாளகேச்வர ,,	30
த்ரைலோக்ய சிந்தாமணி	29
நித்யோதித ரஸம்	42
நித்ரோதய வடி	44
பாலசூர்யோதய ரஸம்	30
பிரதாப லங்கேச்வர	37
பூர்ண சந்திரோதய ரஸம்	25
மஹா கந்தக ரஸ பற்படி	35

	பக்கம்
மஹா கனக சுந்தர ரஸம்	33
,, சீதாம்சு ,,	32
,, ஜ்வராங்குச	33
,, வங்கேச்வர	27
,, ஸந்நிபாத பைரவ	40
மாலினி வஸந்தம்	37
ம்ருத்யுஞ்ஜெய ரஸம்	40
ரஜத சந்திரோதய	41
ரஸ பூபதி	29
ராஜ மிருகாங்கம்	28
ரேசன வடி	41
லகு சூர்யாவர்த்தி ரஸம்	39
லகு ஸந்நிபாத பைரவ ,,	,,
லோஹநாத ரஸம்	28
வாத கஜாங்குச	36
,, ராக்ஷஸ	26
,, வித்வம்ஸனி	36
வேத நாந்தக வடி	44
ஸிந்தூ ரபூஷண	37
ஸிம்ம பிரதிபாலன	38
ஸிம்ஹாஸ்யாதி வடி	42
ஸூத சேகர	27
ஸ்லீபதாரி லோஹம்	42
ஸ்வச்சந்த பைரவ	41
ஸ்வர்ண க்ரவ்யாத	34, 38
ஜ்வராங்குச	32
ஹுதாசன	41

பஸ்ம ஸிந்தூராதி

	பக்கம்
அப்ரக ஸிந்தூரம்	9
அய ,,	13
ஏக குண ஸிந்தூரம்	11
கர்ப்பூரசிலாஜது பஸ்மம்	9
காந்த ஸிந்தூரம்	13
காஸீஸ ,,	11
சங்க பஸ்மம்	18
சிருங்கி ,,	,,
சுக்தி ,,	,,
சூர்யாவர்த்த ரஸம்	10
தாம்பர பஸ்மம்	13
நவக்கிரஹ ஸிந்தூரம்	12
நாக பஸ்மம்	17
பிரவாள ,,	,,
முத்து ,,	,,
ரஜத ,,	15
,, சந்திரோதயம்	,,
லோஹ பஸ்மம்	12
,, ஸௌவீரம்	13
வங்க பஸ்மம்	16
வராடிக ,,	18
வாதாக்னி குமாரன்	10
ஸௌராக்ஷார காஸீஸ ஸிந்தூரம்	11
ஸ்வர்ண பஸ்மம்	14
,, மாக்ஷிக பஸ்மம்	,,
ஷட்குண ஸிந்தூரம்	12
ஹிங்குலோத்தரஸ ,,	11
ஜஸத பஸ்மம்	15

கலப்பு வர்க்கம்

அபயாரிஷ்டம்	1
அவல்குஜாதி லேபம்	8

	பக்கம்		பக்கம்
கருடாஞ்ஜனம்	3	நாரிகேளாஞ்ஜனம்	7
கர்ப்பூராரிஷ்டம்	2	நேத்திர பிந்து	6
கிராதாரிஷ்டம்	1	பச்சை மாத்திரை	5
குடூசி ஸத்வம்	10	பப்பூல கபலீ	8
சங்கத்திராவகம்	2	பாததாரி லேபம்	7
சந்தனாதி வடி	4	ரஸோத்தமாதி ,,	9
சந்திரகலா லேபம்	9	விமலைக் குளிகை	5
சந்திரோதயவர்த்தி	3	ஸத்யோவிரணஹர லேபம்	7
சித்திநாகார்ஜுனவர்த்தி	,,	ஸிந்தூராதி ,,	9
தாம்பர ராஜன்	6	ஸுநேத்ரீ	4
திரிபலா லேபம்	8	ஸுரதாரு லேபம்	8
துத்தத் திராவகம்	10	ஹிங்குள ,,	7
துத்தாதி சூர்ணம்	,,	ஜெம்பீராதி பானகம்	10
துவரக லேபம்	8		

——: 0 :——

கோக்ஷுராதி க்வாதம் (ஸஹஸ்ர யோகம்)

நெருஞ்சில், இஞ்சி, மூக்கரட்டை, கடுக்காய், தேவதாரு, சுக்கு, பூண்டு, நீர்முள்ளி இவைகளை சமன்கூட்டி 4 மடங்கு ஜலம்விட்டு எட்டிலொன்ருய்ச் சுண்டக்காய்ச்சி காலே, மாலே $\frac{1}{4}$ சேர் உட்கொண்டு வர வீக்கந்தீரும்.

நிம்பாதி க்வாதம் (ஸஹஸ்ர யோகம்)

வேப்பம்பட்டை, திரிபலே, பேய்ப்புடல், மஞ்சள், ஆடாதோடை, சீந்தில், நன்னரி, வெண்சிவதை, லவங்கப்பத்திரி, நெருஞ்சில், சித்தாமுட்டி, அவுரிவேர், பேராமல்லி, அதிமதுரம் இவைகளைக் கூட்டித் தயாரித்த கஷாயத்தில் தேன், திப்பிலிப்பொடி, சிலாஜது பஸ்பம்கூட்டி யுட்கொள்ள ஐந்து தினங்களில் கும்ப, ஹலீமக காமாலே தீரும்.

சின்னருஹாதி க்வாதம் (ஸஹஸ்ர யோகம்)

சீந்தில்தண்டு, ஆடாதோடை, நிலவேம்பு, பர்ப்பாடகம் இவைகள் வகைக்கு 1 தோலா, சுக்கு 2 தோலா, சித்தாமுட்டி 3 தோலா, காஞ்சோரி வேர் 3 தோலா இவைகளே இடித்து 4 பங்கு ஜலத்திலிட்டு எட்டிலொன்ருய்ச் சுண்டவைத்து $\frac{1}{4}$ சேர் வீதம் காலே, மாலே யுட்கொண்டு வர வாத, பித்த, கப, த்வந்த, ஸந்நிபாத, விஷம ஜ்வரங்களைக் கண்டிக்கும்.

தசமூல கடுத்ரயாதி க்வாதம் (ஸஹஸ்ர யோகம்)

தசமூலம், திரிகடு, ஆடாதோடை சேர்த்துத் தயாரித்த கஷாயத்தில் தேன்கூட்டி குடிக்க சுவாசம், காசம், வாய்வு, பார்ச்வசூலே, பிருஷ்டசூலே, கடிசூலே, சிரச்சூலே, ஜ்வரம் முதலிய பிணிகள் போகும்.

கந்தர்வ ஹஸ்தாதி க்வாதம் (ஸஹஸ்ர யோகம்)

ஆமணக்குவேர், புங்கம்வேர், சித்ரமூலம், சுக்கு, கடுக்காய், வெள்ளைச்சாடறணை, காஞ்சோரிவேர், நிலப்பனை இவைகளின் சேர்க்கையாலான கஷாயத்தில் இந்துப்பு, வெல்லம் கூட்டி யுட்கொள்ள வாதத்தை சமனஞ்செய்யும். தீபனமதிகரிக்கும். அரோசகத்தை மாற்றி பசியை யுண்டுபண்ணும். மலபந்தத்தை மாற்றும்.

லகுராஸ்ஞாதி க்வாதம் (ஸஹஸ்ர யோகம்)

அரத்தை, ஆமணக்கு வேர், சித்தாமுட்டி வேர், மருதாணி, சதாவரி, காஞ்சோரி வேர், ஆடாதோடை வேர், சீந்தில் கண்டு, தேவதாரு, அதிவிடயம், கோரைக்கிழங்கு, நீர்முள்ளி, கிச்சிலிக்கிழங்கு, சுக்கு இவைகளை சமன்கூட்டி 4 மடங்கு ஜலம் விட்டு எட்டிலொன்றாய்ச் சுண்டக்காய்ச்சிய கஷாயத்தை சீதமாக, நெய், எள்நெய் கூட்டி யுட்கொள்ள இடுப்பு, திரிகம், பிருஷ்டம், பார்ச்வம், முகம் முதலியவைகளைப் பற்றிய வாய்வு, வலிகளைப் போக்கும் வாத ரக்தத்தையும், வீக்கத்தையும் கண்டிக்கும்.

மஹா ராஸ்ஞாதி க்வாதம் (ஸஹஸ்ர யோகம்)

அரத்தை, லவங்கப்பத்திரி, ஆடாதோடை வேர், அகில், கிச்சிலிக்கிழங்கு, தும்மட்டிக்காய், கோரைக்கிழங்கு, செவ்வியம், சிறுபீளை வேர், நெல்லிமுள்ளி, சிறுதேக்கு, பேய்ப்புடல், புஷ்கர மூலம், மஞ்சள், மருதாணி, சுக்கு, சித்திரமூலம், தசமூலம், தேவதாரு இவைகளைச் சமனாய்க்கூட்டி முறைப்படி கஷாயம் வைத்து அதில் சுக்கு, இந்துப்பு, கல்கண்டு கூட்டி உஷ்ணமாக சாப்பிட்டுவரின் பற்பல வாதவிகாரங்களைக் கண்டிக்கும். வாததோஷத்தோடு கூடியுள்ள தொந்த, ஸந்நிபாத தோஷங்களையும் சமனஞ்செய்யும்.

தேஜராஜ மரிசம் (ஸஹஸ்ர யோகம்)

ஒருபடி கரிசலாங்கண்ணிச் சாற்றில் 4 பலம் மிளகைப் போட்டு வேகவைத்து அதில் கடுக்காய்த்தோல், அரிசித் திப்பிலி, சிறுதேக்கு, இந்துப்பு, புஷ்கரமூலம் வகைக்குப் பலம் $\frac{1}{4}$ பொடித்துத் தூவிக் கிளறி சிறுதீயா யெரித்து சாறு சுண்டினவுடன் அடுப்பினின்று இறக்கி வெய்யலில் வைத்து உலர்த்தி இடித்துப் பொடித்து வைத்துக்கொண்டு திரிகடி, வெருகடியளவு தேனிற்கலந்து காலை, மாலை யுட்கொண்டு வர காசம், சுவாசம் தீரும்.

அர்க்க லவணம் (பைஷஜ்ய ரத்நாவளி)

முதிர்ந்த எருக்கிலையையும், இந்துப்பையும் சமனெடை கூட்டி யிடித்து அடைதட்டி சட்டியிலிட்டு மூடி எரிக்கவும். இலைகள் யாவும் நன்றாய்க் கருகின பின்னிறக்கி ஆறவைத்துப் பொடித்துப் புட்டியில் வைத்துக்கொள்க. மூவ்விரல் பொடியை தயிர்ஜலம், மோர் இவைகளில் கலந்து உட்கொண்டு வர யகிருத், ப்லீஹாபி விர்த்தி, உதரவாய்வு, சூலை, குன்மம் தீரும்.

திரிபலா சூர்ணம் (பைஷஜ்ய ரத்நாவளி)

கடுக்காய்த்தோல் பலம் 1, தான்றிக்காய்த்தோல் பலம் 2, நெல்லிக்காய்த்தோல் பலம் 4, இவைகளை இடித்துப் பொடித்து வஸ்திரகாயஞ் செய்துக்கொள்க. இதனை சீனி, நெய், தேன் முதலியவைகளில் கூட்டி யுட்கொள்வதுடன் பற்பல மருந்துகளுக்கு அனுபானமாகவும் உபயோகிக்கலாம். சூர்ணமாகவும், லேகியமாகவும் செய்வதானால் திரிபலையை இந்த எடைப் பிரகாரம் கூட்டிச் செய்தல் நலமென்க. மற்றப் பிரயோகங்களில் ஸமாம்சமாக எடுத்துக்கொள்ளல் வேண்டும். இதன்

குணங்களை கவிராஜ சேகரம் சுஷாயவர்க்கத்தில் திரிபலா க்வாதத்திலும், ஸகஸ்ர ஸித்தயோகம் சூர்ண வர்க்கத்தில் திரிபலா சூர்ணத்திலும் பார்த்துணர்க.

திரிகடு சூர்ணம் (பாவ ப்ரகாசம்)

சுக்கு, மிளகு, அரிசித் திப்பிலி இம்மூன்றினையும் சமனெடை கூட்டி யிடித்து வஸ்திரகாயஞ் செய்துக்கொள்வதேயாம். இதனைத் தனியாகவும், மருந்துகளுக்கு அனுபானமாகவும் உபயோகிக்கலாம். வாத, பித்த, கப தோஷங்களைக் கண்டிக்கும். தீபனம், பாசனம் விர்த்தியாகும். அருசி நீங்கும்.

கோக்ஷுராதி சூர்ணம் (ஸஹஸ்ர யோகம்)

நெருஞ்சில், வெள்ளரிவித்து, சிறுபீளை, சிறுகீரை, அரைக்கீரை, அதிமதுரம், கொத்தமல்லி, அரத்தை இவைகளைச் சமன்கூட்டி யிடித்துச் சூர்ணித்துக் கொள்க. இது நீரைப் பிரித்து வீக்கத்தை வடிக்கும். நாபியழலையை மாற்றும். மூத்திர கிருச்ரம், வெட்டை, சோபை முதலிய நோய்களிலும் உபயோகிக்கலாம்.

வைச்வானர சூர்ணம் (ஸஹஸ்ர யோகம்)

இந்துப்பு 1 பலம், ஜீரகம் 2 பலம், ஓமம் 3 பலம், திப்பிலி 4 பலம், சுக்கு 5 பலம், கடுக்காய்த்தோல் 15 பலம் கூட்டி யிடித்து வஸ்திரகாயஞ் செய்துக்கொள்வதேயாம். இதன் குணங்களை மணிமந்தாதி சூர்ணத்தில் காண்க.

ராஸ்னாதி சூர்ணம் (ஸஹஸ்ர யோகம்)

அரத்தை, அமுக்கிராக்கிழங்கு தேவதாரு, கடகரோகணி, சீந்தில் தண்டு, சஞ்சல்யம், வெட்டி வேர், கோஷ்டம்,

வெள்வசம்பு, காவி, மஞ்சள், அதிமதுரம், சித்தாமுட்டி, கோரைக்கிழங்கு, திரிகடு, புங்கு, ஸஹஸ்ரபேதி, விலாமிச்சம் வேர், வெட்டி வேர், கடல்நுரை, சந்தனம், அகில், புளியிலை ஈர்க்கு இவைகளை யெல்லாம் சமனெடை கூட்டி யிடித்துப் பொடித்து வைத்துக்கொள்ளவும். இதில் திரிகடி பிரமாணம் தனியாகவும் விளக்கெண்ணெய்யில் குழைத்தும் உச்சியில் தேய்க்க ஜலதோஷம், தலைவலி, சிரோ பாரம், ஜ்வரம், பிடரி வலி முதலியவைகளைக் கண்டிக்கும்.

அச்வகந்தி சூர்ணம் (ஆ. மு.)

அமுக்கிராக்கிழங்கை பசும்பாலில் வேகவைத்து உலர்த்தி இடித்து வைத்துக்கொண்டு திரிகடி பிரமாணம் சீனி, நெய், தேன், பால் கூட்டி யுட்கொண்டு வர, ஜ்வரம், வாய்வு, சூலை, பாண்டு, க்ஷயம், வீக்கம் முதலியவைகளைக் கண்டித்து, தீபனத்தை அதிகரித்து, நரம்புகளுக்கு வலுவைத் தரும். போக இச்சையும், புணர்ச்சி நிர்வாகமு முண்டாகும்.

மதுஸ்னுஹி சூர்ணம் (ஆ. மு.)

பசும்பாலில் வேகவைத் துலர்த்திய பறங்கிப்பட்டையை யிடித்து வஸ்திரகாயஞ்செய்து வைத்துக்கொண்டு திரிகடி யளவு சர்க்கரை, நெய், பால், தேன் முதலிய வனுபானங் களில் கொடுத்து வர பற்பல மேகம், கிரந்தி, புண், ரணம், பிளவை, நீரிழிவு, வாதப்பிணி, விஷக்கடிகள் தீரும். விந்து நஷ்டத்தை மாற்றி தாது விர்த்தியைத் தரும்.

கடுகுரோகணி சூர்ணம் (ஆ. மு.)

கடுகுரோகணியை இளம் வருப்பாய் வறுத்து இடித்துப் பொடித்து வைத்துக்கொள்க. விளக்கெண்ணெய், தேன், சீனி முதலிய வனுபானங்களி லுட்கொள்ள, பழமலத்தைக்

கழித்து, உதரவாய்வைக் கண்டிக்கும். கிருமி, வயிற்று வலி, மந்த ஜ்வரம், கண ஜ்வரம், கப வாத கோபம் முதலியவைகளை நீக்கும்.

ஸாமுத்ராதி சூர்ணம் (யோக ரத்நாகரம்)

ஸாமுத்ர லவணம், ஸைந்தவம், ஸௌவர்ச்சலவணம், க்ஷாரத்வயம், ஓமத்வயம், சுக்கு, கடுக்காய்த்தோல், பெருங் காயம், அரிசித் திப்பிலி, வாய் விளங்கம், சித்திர மூலப் பட்டை இவைகளைச் சமனாய்க்கூட்டி, இடித்து வடிகட்டி திரிகடிப் பிரமாணம் உட்கொண்டு வர அஜீர்ணம், குல்மம், உதர வாய்வு, கிரஹணி, விஷூசி வயிற்றுப்பசம், வயிற்று வலி, பாண்டு, காமாலை, சுவாச காசம் முதலிய பிணிகள் நீங் கும். இதனை அன்னத்தில் கலந்து நெய்விட்டுப் பிசைந்து 3 பிடிசாதம் சாப்பிட்ட பின்னர் மற்ற ஆகாரங்களைப் புசித்து வர முற்கூறிய நோய்கள் தீரும். கடுக்காயை நீக்கிச் செய்யும் படி பைஷஜ்ய ரத்நாவளி கூறும்.

சிருங்கபேராதி சூர்ணம் (ஸஹஸ்ர யோகம்)

தோல்போக்கிப் பில்லை பில்லையாய் நறுக்கிய இஞ்சி வீசை 1, ஜீரகம் வீசை $\frac{1}{2}$, மல்லிவிரை வீசை $\frac{1}{2}$, இந்துப்பு வீசை $\frac{1}{4}$, இவைகளை கோட்பையிலிட்டு 100 எலுமிச்சம் பழச்சாற்றைப் பிழிந்து பாவனைசெய்து, உலர்த்திப் பொடித்து வைத்துக் கொண்டு மூவ்விரல் காலை, மாலை யுட்கொண்டு வர அரோ சகத்தை மாற்றி, அச்கினி மந்தத்தைப் போக்கி, பித்தவாய்வை கண்டிக்கும்.

லாக்ஷா சூர்ணம் (ஆ. மு.)

கொம்பரக்கை சுத்த ஜலத்திலிட்டுக் கழுவித்துடைத்து ரவியிலுலர்த்தி, இடித்து வஸ்திரகாயஞ்செய்து வைத்துக்

கொள்ளவும். இதில் 2, 3, 4, குன்றியளவு பனை வெல்லம், சீனி, தேன், நெய், பால் முதலியவைகளி லனுபானித்துக் கொடுக்க பெரும்பாடு, அஸ்தி ஜ்வரம், வயிற்று வலி, சுவாசம், பித்த பாண்டு, கபம், நேத்திரரோகந் தீரும்.

மஹா சுதர்சன சூர்ணம் (ஆ. மு.)

கவிராஜ சேகரம் சூர்ணவர்க்கம் ஒன்பதாம் பக்கத்தில் கூறியுள்ள சுதர்சன சூர்ணத்துடன் சின் கோனுப்பட்டை சூர்ணத்தை நான்கிலொன்ருய்க் கூட்டி வைத்துக்கொள்வது தான் மஹா சுதர்சன சூர்ணமெனப்படும். இம்முறை "கவர்ன்மெண்ட் ஸ்கூல் ஆப் இன்டன் மெடிஸன்ஸ்" ஆஸ்பத்திரியில் கையாளப்பட்டு வருகின்றது.

டங்கண சூர்ணம் (ஆ. மு.)

எண்ணெய் வெங்காரத்தை எலுமிச்சம் பழச்சாற்றில் பாவனைசெய் துலர்த்தி லோஹ பாத்திரத்திலிட்டெரிக்கப் பொரியும். இதனை கல்வத்தி லிட்டரைத்து புட்டியிலடைத்துக் கொள்க. 2, 3, 4, 5 குன்றி யளவு வியாதிகளுக்கேற்ற வனுபானங்களில் கொடுக்க நீரடைப்பு, கல்லடைப்பு, வயிற்று வலி, சூதக வாய்வு, கிரஹணி, கபம், இருமல் போக்கும். மேற்பூச்சினுல் சொறி, சிரங்கு, புண், படை, கரப்பான், காணுக்கடி முதலியவைகளை நீக்கும்.

யவானீ காண்டவ சூர்ணம் (ஸுச்ருதம்)

ஓமம், புளி, சுக்கு, ஆம்லவேதஸம், மாதளம்பழம், இலந்தைப்பழம் இவைகள் வகைக்குப் பலம் $\frac{1}{4}$, மல்லி, கருப்புப்பு, ஜீரகம், லவங்கப்பட்டை வகைக்குப் பலம் $\frac{1}{8}$, அரிசித் திப்பிலி 100, மிளகு 200, கல்கண்டு பலம் 4 இவைகளைக்

கூட்டி யிடித்துச் சூர்ணஞ்செய்துக் கொள்ளவும். இதனில் ஒரு சிடிகை தினம் பலதடவை வாயிலிட்டுச் சுவைத்து வர, அருசியைமாற்றி, தீபனத்தை விருத்தி செய்யும். ஹிருதயத்திற்கு வலுவை யுண்டாக்கும். நாக்கை சுத்தப்படுத்தும். குல்மம், மார்வலி, வயிற்றுப்பொருமல், மலபந்தம், பக்கசூலை, கிரஹணி, ப்லீஹாபிவிருத்தி, மூலம், காசம், சுவாசந்தீரும். கத நிக்ரஹத்தில் $\frac{1}{8}$ பலம் ஏலத்தையும் கூட்டிச் செய்யும்படி கூறப்பட்டிருக்கிறது. இதனையே அக்கிரந்தம் "ஷாடவ சூர்ணம்" எனக்கூறும்.

பலி சூர்ணம் (ஸஹஸ்ர யோகம்)

சுத்தி செய்த கந்தகம், திரிகடு, ஜீரகம், ஏலம், கிராம்பு, அதிமதுரம், தாளீசப்பத்திரி, ஜடாமாஞ்சி, கண்ட திப்பிலி, சந்தனத்தூள் இப்பன்னிரண்டும் சமனெடையாய்க் கூட்டி யிடித்து வஸ்திரகாயஞ் செய்து மொத்த யெடைக்கு இரட்டிப்பு சீனி கலந்து மூவ்விரற்கொண்ட சூர்ணத்தை காலை, மாலை யுட்கொண்டு வர அஜீர்ண பேதி, அதிசார பேதி, கிரஹணி முதலிய பற்பல வயிற்றுப் போக்குகளையும் கட்டி ஜீரணத்தை விர்த்திசெய்யும்.

தந்த தாவன சூர்ணம் (ஆ. மு.)

திரிகடு, திரிபலை, அதிமதுரம் இவ்வேழும் வகைக்குப் பலம் 3 கூட்டி யிடித்து வஸ்திரகாயஞ் செய்து அத்துடன் பொரித்த வெங்காரம் பலம் 1, இந்துப்பு பலம் 1 பொடித்துக் கூட்டிக் கலந்து வைத்துக்கொள்ளவும். இதனை தேனில் கலந்து பல்துலக்கி வர தந்த ரோகங்கள் தீரும். வாய் வேக்காடு, வாய் நாற்றம் தீரும். நாவில்படியும் அழுக்கினை நீக்கி அருசியைப் போக்கும்.

ஜாதீபலாதி சூர்ணம் (ஸார்ங்கதரம்)

ஜாதிக்காய், லவங்கம், ஏலம், லவங்கப்பத்திரி, லவங்கப் பட்டை, சிருநாகப்பூ, கர்ப்பூரம், சந்தனம், எள், மூங்கிலுப்பு, தகரம், நெல்லிமுள்ளி, தாளீசம், திப்பிலி, கடுக்காய், பெருஞ் ஜீரகம், சித்திரமூலப்பட்டை, சுக்கு, வாய்விளங்கம், மிளகு இவைகள் சமனெடை, இவைகளுக்கு மொத்தயெடை சுத்தி செய்த கெஞ்சா இவைகளைக் கூட்டி யிடித்து வஸ்திரகாயஞ் செய்து சமன் சர்க்கரை சேர்த்து வைத்துக்கொண்டு 5 முதல் 10 குன்றியெடை தேனில் குழைத்துக்கொள்ள கிரஹணி, அதிஸாரம், க்ஷயம், வாதசிலேஷ்மம், ஜலதோஷம், அருசி முதலிய பிணிகள் தீரும்.

சித்ரகாதி சூர்ணம் (யோக தரங்கிணி)

ஓமம் பலம் 1, மிளகு பலம் 2, சுக்கு பலம் 3, ஜீரகம் பலம் 4, இந்துப்பு பலம் 10, சித்திரமூலப்பட்டை பலம் 10, இவைகளைக் கூட்டி யிடித்து வஸ்திரகாயஞ் செய்து மூவ்விரல் மோரிலுட்கொள்ள அஜீர்ணம், கிரஹணி, விஷூசி, குல்மம், தீரும்.

(வேறு) தாளீசாதி சூர்ணம் (அஷ்டாங்க ஹிருதயம்)

தாளீசபத்திரி பலம் 1, மிளகு பலம் 2, சுக்கு பலம் 3, அரிசித் திப்பிலி பலம் 4, கூகைநீர் பலம் 5, ஏலரிசி பலம் $7\frac{1}{2}$, லவங்கப்பட்டை பலம் $7\frac{1}{2}$ இவைகளைக் கூட்டி யிடித்து வஸ் திரகாயஞ் செய்து சமன் கல்கண்டுபொடி கலந்து திரிகடிப் பிரமாண முட்கொள்ள காசம், சுவாசம், க்ஷயம், ஜ்வரம், அருசி, அக்கினிமந்தம் தீரும். வெங்கடரமண வைத்திய சாலையில் உபயோகித்து வரும் தாளீசாதி சூர்ணமிதுவே யாகும். கூகை நீருக்குப்பதில் மூங்கிலுப்பைச் சேர்ப்பது நலம்.

யவான்யாதி சூர்ணம் (யோக ரத்நாகரம்)

ஓமம், மோடி, சுக்கு, திப்பிலி, சா துர்ஜாதம், சிருநாகப்பூ, விலாமிச்சம் வேர், உலர்த்திய புளியிலே இவைகளைச் சமனுய்க் கூட்டி, இடித்து வஸ்திரகாயஞ் செய்து அந்த எடைக்குச் சர்க்கரைக் கூட்டி $\frac{1}{4}$ பலம் வீதம் வெள்ளாட்டுப் பாலுடன் உட்கொண்டுவர அஜீர்ணம், கிரஹணி, சீதபேதி, தாகம் தீரும்.

சதுராம்ல சூர்ணம் (அஷ்டாங்க ஹிருதயம்)

இலந்தை, மாதளை, ஆம்லவேதஸம், புளி வகைக்குப் பலம் 16, லவணத்ரயம் வகைக்குப் பலம் 4, திரிகடு வகைக் குப் பலம் 3, சர்க்கரை பலம் 8 இவைகளைக் கூட்டி யிடித்துச் சூர்ணித்து திரிகடியளவு உபயோகித்துவரின் அருசி, மந்தம், சூலை, காசம், சுவாசம், ஹிருத்ரோகந் தீரும்.

ஐலேயகாதி சூர்ணம் (ஸஹஸ்ர யோகம்)

கொத்தமல்லி, ஜீரகம், அதிமதுரம், ஜடாமாஞ்சி, சந்த னத்தூள், தாளீசபத்திரி, வாய்விளங்கம், திரிஜாதம், மூங்கி லுப்பு, பேரீச்சு, திராக்ஷை இவைகள் சமன், இவை எல்லா வற்றுக்கும் சமன் உலர்த்தின முசுமுசுக்கை இவைகளை உரலி லிட்டிடித்து வஸ்திரகாயஞ் செய்து சமன் சர்க்கரைக் கூட்டி காலை, மாலை $\frac{1}{4}$ தோலா வீதம் உட்கொண்டு வர பற்பல பித்த விகாரங்களையும், கப தோஷங்களையும் போக்கும்.

ஹரித்ராதி சூர்ணம் (பஸவ ராஜீயம்)

மஞ்சள், வெள்ளைக் காசுக்கட்டி இந்த இரண்டினையும் பொடித்துச் சமனுய்க் கூட்டி $\frac{1}{4}$, $\frac{1}{2}$ விராகனெடையளவு தக்க வனுபானங்களில் கொடுக்க, பெண்டுகளுக்குண்டாகும் பெரும் பாடு, அகாலருது, வெட்டை முதலிய பிணிகளைப்போக்கும்.

சிஞ்சாதி லேகியம் (ஸஹஸ்ர யோகம்)

பழம் புளி பலம் 1, பழைய வெல்லம் பலம் 5, சுத்தி செய்து இடித்துப் பொடித்த சிட்டம் பலம் 10, வில்வவேர் பலம் 2, வாய்விடங்கம் பலம் 2, வால்மிளகு, திரிகடு, திரிபலை, ஜீரகத்வயம், திரிஜாதம், அதிமதுரம், அரத்தை, ஜாதிக்காய், ஜாதிபத்திரி வகைக்குப் பலம் $\frac{1}{4}$, இவைகளை முறைப்படி கூட்டி யிடித்து வைத்துக்கொண்டு தேன் அல்லது மோரு டன் கழற்சிக்காயளவு உட்கொண்டு வர பாண்டு, காமாலை, சோவை, தேகவெளுப்பு, மஞ்சள்நிறம், தாகம், தாபம், வறக்ஷி, மேல்மூச்சு, ஜ்வரம் முதலியவைகள் நீங்கி தீபனம், பாசனம், ருசி அதிகரிக்கும். இரத்த விருத்தியும் சுத்தியு முண்டா கும். கால், அரை, ஒரு மண்டலம் உட்கொள்ளவும்.

(வேறு) பில்வாதி லேகியம் (ஸஹஸ்ர யோகம்)

வில்வவேர் 20 பலம் இடித்து ஒரு மட்பாண்டத்தி லிட்டு 4 படி ஜலம் விட்டு 1 படியாய்ச் சுண்டக்காய்ச்சி ஆறியபின் வடிகட்டிப் பிழிந்த கஷாயத்தில் பழைய வெல்லம் பலம் 16 கூட்டிப் பாகு காய்ச்சி கோரைக்கிழங்கு, மல்லி, ஜீரகம், ஏலரிசி, லவங்கப்பட்டை, சிறுநாகப்பூ, திரிகடு வகைக்குப் பலம் $\frac{1}{4}$ பொடித்துப்போட்டு கொஞ்சம் நெய் விட்டுக் கிளறி வைத்துக்கொண்டு கொட்டைப் பாக்களவு காலை, மாலை போதுமான நாள் உட்கொண்டு வர வாந்தி, அரோசகம், அக்நிமந்தம், சுவாஸம், ஜலதோஷம் தீரும்.

அச்வகந்தி ரஸாயனம் (ஸுச்ருதம்)

அமுக்கிராக்கிழங்கு, அரிசித் திப்பிலி, எள், உளுந்து இவைகள் வகைக்குப் பலம் 4, இடித்துப் பொடித்து வெல் லம் பலம் 16, நெய் பலம் 4, தேன் பலம் 2 கூட்டி லேகியம்

செய்து வைத்துக்கொண்டு கொட்டைப் பாக்களவு தினமிரு வேளை யுட்கொண்டு வர பலம், புஷ்டி, வீர்யம், தீபனம், பாசனம், விருஷ்யம் உண்டாகும். வாதத்தை சமனஞ்செய்யும்.

மஹா பில்வாதி லேகியம் (சிந்தாமணி)

வில்வவேர் பலம் 100, சிற்றுமுட்டி பலம் 50, நெற்பொரி, கோரைக்கிழங்கு, சந்தனத்தூள், விலாமிச்சம்வேர், நெல்லிமுள்ளி, பருத்திவிரைப் பருப்பு, திராக்ஷைப் பழம், செவியம், மல்லி, ஜீரகம், எலரிசி, சுக்கு வகைக்குப் பலம் 16 இவற்றை எல்லாம் நன்றாய்ச் சிதைத்து 32 படி ஆற்று ஜலம் விட்டு 3 நாள் ஊறவைத்து நாலாம் நாள் அடுப்பிலிட்டு 4 படி கஷாயமாகச் சுண்டக்காய்ச்சி வடிகட்டி அத்துடன் இஞ்சிச்சாறு, பழச்சாறு, வெற்றிலைச்சாறு வகைக்குப் படி கலந்து சர்க்கரை வீசை 2 கூட்டிப் பாகு காய்ச்சி அதில் சுக்கு பலம் 4, மிளகு பலம் 4, அரிசித் திப்பிலி, கண்டத்திப்பிலி, சிறுநாகப்பூ, திப்பிலி மூலம், தாளீசபத்திரி, கொடிவேலிவேர்ப்பட்டை, மல்லி, ஜீரகம், நெருஞ்சிவித்து, மூங்கிலுப்பு, லவங்கம் வகைக்குப் பலம் 2, இடித்து வஸ்திரகாயம் செய்துத் தூவி நெய் வீசை $\frac{3}{4}$, தேன் வீசை $\frac{1}{4}$ விட்டுக் கிளறி $\frac{1}{4}$ பலம் வீதம் காலை, மாலை உட்கொண்டு வர பித்தம் 40, பாண்டு, காமாலை, ஹ்ருத்ரோகம், க்ஷயம், ரக்தபித்தம், வாந்தி, கை காலெரிவு, கிருகிருப்பு, தலைச்சுழற்றல், பிரமை, வாயூறல், அரோசிகம் முதலான சகல பித்தவாத சம்மந்தமான ரோகங்கள் நிவர்த்தியாகும்.

கபித்த பில்வாதி லேகியம் (சிந்தாமணி)

வில்வவேரும், பழமும் பலம் 25, விளாம்வேரும் பழமும் பலம் 25, பேய்ப்புடல், சிறுகீரை, தண்ணீர்விட்டான் கிழங்கு,

கோரைக்கிழங்கு, பொன்னுங்காணி, பர்ப்பாடகம், விலாமிச்சம்வேர், சீந்திற்கொடி, கீழாநெல்லி, இஞ்சி வகைக்குப் பலம் 5, இவைகளை மசிய இடித்து 4 மரக்கால் ஜலத்திற் போட்டு 3 நாள் ஊறிய பின் அடுப்பிலிட்டுக் காய்ச்சி, $\frac{1}{2}$ மரக்காலாய்ச் சுண்டவைத்திறுத்த கஷாயத்தில் பழச்சாறு, இஞ்சிச்சாறு, பசும்பால் வகைக்குப் படி $\frac{1}{2}$ (சின்னபடி) சேர்த்து நாட்டுச் சர்க்கரை வீசை $1\frac{1}{2}$ கூட்டிப் பாகு காய்ச்சி அதில் திரிகடு, திரிபலை, சாதுர்ஜாதம், மதுரம், மல்லி, திப்பிலிமூலம், ஜீரகம், கண்டு பரங்கி, தீராக்ஷை, கர்ச்சூரம், வகைக்குப் பலம் 1, மூங்கிலுப்பு பலம் 6, சூர்ணித்துச் சேர்த்து தேன் பலம் 10, நெய் வீசை $\frac{3}{4}$ சேர்த்து லேகியம் செய்து காலை, மாலை கொட்டைப் பாக்களவு சாப்பிட்டு வர வாந்தி, தலை சுற்றல், அரோசகம், பித்தம், குன்மம், ஹ்ருத்ரோகம், ரக்த பித்தம், ஆம்ல பித்தம், பாண்டு நிவர்த்தியாகும்.

குண்டலாதி லேகியம் (பஸவ ராஜீயம்)

சங்கம் வேர்ப்பட்டை பலம் 50, கண்டங்கத்திரி பலம் 25, செவியம் பலம் 25, தசமூலம் வகைக்குப் பலம் 25, கீழா நெல்லி பலம் 25, கண்டு பரங்கி பலம் 20, திப்பிலி மூலம் பலம் 20, கொடிவேலி வேர் பலம் 20 இவைகளை இடித்துத் தூளாக்கி 2 துரோணம் ஜலம்விட்டு $\frac{1}{4}$ துரோணம் கஷாயமாய்ச் சுண்டவைத்துப் பின் அதில் சீனி பலம் 50, பழைய வெல்லம் பலம் 50 சேர்த்துப் பாகு காய்ச்சித் திப்பிலி பலம் 20, மூங்கிலுப்பு பலம் 4, திரிஜாதம், ஜீரகம், கருஞ் ஜீரகம், காயம் வகைக்குப் பலம் 3, கண்டுபரங்கி, கடுக்காய்ப்பூ வகைக்குப் பலம் 2, சுக்கு, மிளகு வகைக்குப் பலம் 10 சூர்ணித்துப் போட்டு அய ஸிந்தூரம் பலம் 4 சேர்த்துத் தேன் படி 1, நெய் படி 2 விட்டுக் கிளறி வைத்துக்கொண்டு உபயோ

கித்து வர சுவாச காசம், குஷ்டம், சூலை, வாதம், ஸ்வரபேதம், அக்நிமந்தம், ஹ்ருத்ரோகம், குன்மம், விக்கல், மூலம், ப்லீஹை, மஹோதரம், கிரஹணி முதலிய ரோகங்கள் குணமாகும்.

மஹா கந்தக ரஸாயனம் (பஸவ ராஜீயம்)

சுத்திசெய்த கந்தகம் பலம் 6 திரிகடுகு, திரிஜாதம், சேராங்கொட்டை, சித்திரமூலப் பட்டை, ஜாதிக்காய், கடலைப் பருப்பு, வாய் விளங்கம், திரிபலை, ஜீரகம், நீர்முள்ளிவிரை வகைக்குப் பலம் 1 இவைகளை இடித்து வஸ்திரகாயம்செய்து சீனி கற்கண்டு பலம் 30, தேன் பலம் 10 சேர்த்து நெய்விட்டுப் பிசைந்து 1, 2, 3 விராகனெடை வீதம் தேகத்துக்குத் தக்கவாறு இருவேளையும் சாப்பிட்டு வர குஷ்டம், மேகம், குன்மம், கிரஹணி, அதிசாரம், மூலம், வாதம், மந்தாக்நி, ஷண்டத்வம் தீரும். யானையின் பலம், குதிரையின் வேகம், தீர்க்கமான ஆயுள், திவ்யதேகம், அநேக ஸ்திரீகளைப் புணர்ச்சி செய்யவல்ல வீர்யவிர்த்தி, இந்திரியக்கட்டு, பகலில் நக்ஷத்திரத்தைப் பார்க்கத்தக்க கண்ணொளி முதலியவைகளைத் தரவல்ல சிறந்த ரஸாயனம்.

குட பிப்பலி (பைஷஜ்ய ரத்நாவளி)

வாய் விளங்கம், திரிகடு, கோஷ்டம், பெருங்காயம், பஞ்சலவணம், க்ஷாரத்ரயம், கடல்நுரை, சித்ரமூலப் பட்டை, யானைத்திப்பிலி, கருஞ் ஜீரகம், கொட்டைப் பாக்கு, பனம்பூ, உப்பு, பூசனிக்காய் மேல் தோலுப்பு, நாயுருவி யுப்பு, புளியம்பரணி யுப்பு, இவைகள் சமன், இவைகளின் மொத்த டை திப்பிலி இவைகளைக் கூட்டி யிடித்து வஸ்திரகாயஞ் செய்து இரண்டு பங்கு பழைய வெல்லம் கூட்டி யிடித்து அரைத்து கர்ஷ ப்ரமாணம் காலை, மாலை உஷ்ணோதகத்துடன் உட்கொண்டு வர ப்லீஹம், யகிருத், குல்மம், உதர

ரோகம், புராண ஜ்வரம், வீக்கம், காசம் முதலிய நோய்களைக் கண்டிக்கும். இது பாலர்களுக்கு மிகவும் ஹிதமானது.

ஆர்த்ர கண்டாவ லேகியம் (சிந்தாமணி)

மேல் தோல் நீக்கிய இஞ்சி பலம் 50, சிறு பில்லைகளாக நறுக்கி அதை பசு நெய் பலம் 20-ல் போட்டுப் பொன்னிறமாய் வருத்துப் பொடித்து அத்துடன் சந்தனத் தூள், சித்திரமூல வேர்ப்பட்டை, விலாமிச்சம் வேர், நெல்லிமுள்ளி வகைக்குப் பலம் $\frac{1}{2}$, சுக்கு, ஜடாமாஞ்சி, ரக்த சந்தனம், ஏலக்காய் வகைக்குப் பலம் 1, லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, நாககேசரம், ஜாதிக்காய் வகைக்குப் பலம் $1\frac{1}{2}$, தாளீசபத்திரி, ஜீரகம், மல்லி, மூங்கிலுப்பு வகைக்குப் பலம் 2, அதிமதுரம், திப்பிலி, மிளகு, மோடி வகைக்குப் பலம் $2\frac{1}{2}$ இவைகளைச் சூர்ணித்துக் கூட்டி, கல்கண்டு அல்லது சர்க்கரை வீசை $2\frac{1}{2}$, நெய் வீசை $\frac{3}{4}$, தேன் வீசை $\frac{1}{4}$ கூட்டிக் கிளறி 1 தோலா பிரமாணம் உபயோகித்து வர குல்மம், சூலை, வாய்வு, பித்தம், சுரம், இருமல், உப்பசம், வீக்கம், பாண்டு, காமாலை, அரோசிகம், அக்னிமந்தம் தீரும்.

அமிர்த பல்லாதக லேகியம் (பாவ ப்ரகாசம்)

சேராங்கொட்டை பலம் 32 உரலிலிட்டு இடித்து 32 படி ஜலத்திலிட்டு அத்துடன் சீந்திற்கொடி பலம் 32 இடித்துப்போட்டு எட்டிலொன்றாய்ச் சுண்டக் காய்ச்சி, பிசைந்து வடிகட்டி அதில் நெய் 8 பலம், பால் 8 சேர், கல்கண்டு 16 பலம், தேன் 8 பலம் சேர்த்துக் காய்ச்சி கெட்டிப்பாகு பதத்தில், வில்வ வேர், அதிவிடயம், சீந்தில், கார்போகரிசி, தகரவிரை, வேப்பம்பட்டை, கடுக்காய், தாணிக்காய், நெல்லிக்காய், மஞ்சிஷ்டி, திரிகடு, ஓமம், இந்துப்பு, கோரைக்கிழங்கு, சாதுர்ஜாதம், பர்ப்பாடகம், வெட்டி வேர், விலாமிச்சம் வேர்,

சந்தனம், நெருஞ்சிவித்து, பேரீச்சங்காய், ரக்த சந்தனம் தனித்தனி பலம் ½ சூர்ணித்துப் போட்டு லேகியமாக்கி தினம் காலையில் போதுமான அளவு உட்கொள்ள குஷ்டம், வாத ரக்தம், மூலம் தீரும். பல்லாதக சம்மந்தமான மருந்துகளைச் சேவித்து வரும்போது தேகப்பயிர்ச்சி, வெயில், அக்கினி இவைகளின் தாபம், புளிப்பு, மாம்ஸம், தயிர், புணர்ச்சி, தைல ஸ்நானம், வழி நடை முதலியவைகள் கூடாது. இதனை மஹா பல்லாதக லேகியம் எனவும் கூறும்.

ஹிங்கு த்ரிகுண லேகியம் (ஆ. மு.)

ஹிங்கு த்ரிகுண தைலத்தின் கசண்டை கல்வத்திலிட்டு லேகியம் போலரைத்து வைத்துக்கொண்டு ½, 1 தோலா வீதம் சபயோசித வனுபானங்களில் உட்கொள்ள குல்மம், சூதிக வாய்வு, அண்டவாதம் முதலிய பிணிகள் நீங்கும்.

வாஸா கண்டகாரி லேகியம் (ஆ. மு.)

ஆடாதோடை சமூலம் பலம் 100, கண்டங்கத்திரி சமூலம் பலம் 100 இவ்விரண்டையும் பசியவிடித்து பாண்டத்திலிட்டு எட்டுமடங்கு ஜலம்விட்டு எட்டிலொன்ருய்ச் சுண்ட வைத்து வடிகட்டிய கஷாயத்தில் சீனு கல்கண்டு வீசை 2 பொடித்துப் போட்டு பாகு காய்ச்சி, பதத்தில் திரிகடு, சிற்றரத்தை, சீந்தில் தண்டு, சித்ரமூலம், கடுக்காய்ப்பூ, கண்டுபரங்கி, கோரைக்கிழங்கு, திப்பிலி மூலம், காஞ்சோரி வேர் வகைக்குப் பலம் 1, அரிசித் திப்பிலி பலம் 8, மூங்கிலுப்பு பலம் 8 இடித்து வஸ்திரகாயஞ் செய்துத் தூவி நெய் பலம் 16 விட்டுக்கிளறி ஆறியபின் தேன் பலம் 8 விட்டுப் பிசைந்து வைத்துக்கொண்டு கொட்டைப் பாக்களவு தினமிருவேளை சாப்பிட்டுவர காசம், சுவாசம், ஈளை, க்ஷயம், ஜ்வரம் தீரும். தீபன பாசனம் அதிகரிக்கும்.

அஷ்டமங்கள கிருதம் (பாவ ப்ரகாசம்)

வசம்பு, கோஷ்டம், வல்லாரையிலை, கடுகு, நன்னாரிவேர், இந்துப்பு, திப்பிலி, நெய் இவ்வெட்டையும் கூட்டித் தயாரித்துக் கொள்ளும் கிருதத்திற்கு அஷ்டமங்களக் கிருதமெனப் பெயர். இந்நெய்யை தினந்தோறும் பாலர்களுக்குக் கொடுத்து வர புத்தி, ஞாபக சக்தி, திட க்யானம் அதிகரிக்கும். பூத, பைசாச, யக்ஷ, ராக்ஷஸ, மாத்ரு கண பீடைகள் அணுகாது.

திக்த கிருதம் (அஷ்டாங்க ஹிருதயம்)

பேய்ப்புடல், வேம்பு, கடகரோஹிணி, மரமஞ்சள், வட்டத் திருப்பி, பூனைக்காஞ்சோரிவேர், பர்ப்பாடகம், கழற்சிவேர் வகைக்கு 1 பலம் இடித்து 4 படி ஜலம் விட்டு ½ படியாய்ச் சுண்டவைத்து வடிகட்டி, அதில் நெய் 12 பலம் சேர்த்து கழற்சிவிரை, கோரைக்கிழங்கு, நிலவேம்பு, வெட்பாலையரிசி, திப்பிலி, சந்தனம் இவைகள் வகைக்கு ¼ பலம் மேற்படி கஷாயத்தா லரைத்துக் கல்கமாகக் கூட்டிக் காய்ச்சி வடித்த நெய்யை உட்கொள்ள குஷ்டம், விஸர்ப்பம், பிடகை, கண்டமாலை, நாடீவிரணம், அபசி, விஸ்போடகம், வித்ரதி, குல்மம், ஹிருத்ரோகம், உன்மாதம், அபஸ்மாரம், பகந்தரம், வாத ரக்தம், பாண்டு, சோவை, காமாலை, கிரஹணி, உதர ரோகம், மூலம், ரக்த பித்தம், ச்வித்ரம், வ்யங்கம், தாகம், தாபம், பிரமை, மதம், தினவு, திமிரம் முதலிய அநேக ரோகங்கள் நீக்கும்.

மஹா திக்த கிருதம் (அஷ்டாங்க ஹிருதயம்)

ஏழிலைப்பாலை, பர்ப்பாடகம், கடகரோஹிணி, வசம்பு, திரிபலை, தாமரைக்கிழங்கு, வட்டத் திருப்பி, மஞ்சள், மரமஞ்சள், நன்னாரி, பெருநன்னாரி, திப்பிலி, யானைத்திப்பிலி, வேம்பு, சந்தனம், அதிமதுரம், பேய்க்கும்மட்டி, வாலுளுவை, சீந்தில்,

நிலவேம்பு, விலாமிச்சம்வேர், ஆடாதோடை வேர், பெருங் குரும்பை, தண்ணீர்விட்டான்கிழங்கு, பேய்ப்புடல், அதிவிடயம், கோரைக்கிழங்கு, கொன்னை, வாகை, காஞ்சோரி இவைகள் சமன், இவைகளை இடித்துப் பெரும்பானையில் போட்டு எட்டுமடங்கு ஜலம் விட்டு எட்டில் ஒன்றாய்ச் சுண்டவைத்து வடிகட்டி சமன் நெய்யும், இருமடங்கு நெல்லிக்காய்ச்சாறும் கலந்து, காய்ச்சிப் பக்குவத்தில் வடிகட்டிய நெய்யை முறைப் படி சாப்பிட, அநேக மருந்துகளால் குணமாகாத முற்கூறிய பற்பல கர்மரோகங்களை அதிசீக்கிரத்தில் கண்டிக்கும். இது திக்த கிருதத்தைவிட அதிக வீர்யமுள்ளது.

சச வாஸாதி கிருதம் (ஸஹஸ்ர யோகம்)

முயல் மாம்ஸம் 64 பலம், ஆடாதோடைவேர் இலை முதலியவை 32 பலம், கண்டங்கத்திரி சமூலம் 16 பலம், செவ்வியம் 16 பலம் இவைகளை மசிய இடித்து 32 படி ஜலத்தி லிட்டு, எட்டிலொன்றாய்ச் சுண்டக்காய்ச்சிப் பிசைந்து வடி கட்டிய கஷாயத்தில் நெய் படி 1, கரிசாலைச்சாறு படி 1, ஆடாதோடை யிலைச்சாறு படி 1 கூட்டி பேரரத்தை, மரமஞ் சள், கருஞ்ஜீரகம், கோரைக்கிழங்கு, திப்பிலி, பெரு மரப் பட்டை, திராக்ஷை, கிராம்பு, தேவதாரு, தண்ணீர்விட்டான் கிழங்கு, நெல்லிமுள்ளி, ஜீரகம், இலுப்பைப்பூ, அமுக்கிராக் கிழங்கு, அதிமதுரம், சிறுதேக்கு, கடுக்காய்ப் பூ, சுக்கு, வாய் விளங்கம் வகைக்குப் பலம் $\frac{1}{8}$ அரைத்துக் குழப்பிக் காய்ச்சி, பதத்தில் வடித்து அதில் வெண் மிளகு 3 பலம் பொடித்துப் போட்டு, தேன் பலம் 5 சேர்த்து ஒன்றுபடக் கலந்து $\frac{1}{4}$ ரூபா யெடைவீத முட்கொண்டு வர க்ஷயம், ஜீர்ண ஜ்வரம், கிர ஹணி முதலியவைகளைப் போக்கி புஷ்டியையும், பலத்தையும் தரும்.

கிரகண்யந்தக கிருதம் (ஸஹஸ்ர யோகம்)

வட்டத்திருப்பி, செவ்வியம், புங்கு, மணிப்புங்கு, சர புங்கு, கொடிவேலி வேர், கோரைக்கிழங்கு, சுக்கு இவைகள் வகைக்குப் பலம் 4 இடித்து 8 படி ஜலத்திலிட்டு 1 படியாய்ச் சுண்டவைத்த கஷாயத்தில் நெய் படி 1, இஞ்சிச்சாறு, புளி யாரைச்சாறு, பூண்டு சுரசம், ஆட்டுத்தயிர் வகைக்குப் படி 1 கூட்டி இந்துப்பு, பஞ்சகோலம், யவாக்ஷாரம், சர்ஜக்ஷாரம், அதிவிடயம், காயம், விலாமிச்சம்வேர், ஜீரகம், கருஞ்ஜீரகம், ஓமம் வகைக்குப் பலம் $\frac{1}{4}$ கல்கமாகக் கூட்டிக்காய்ச்சி வடி கட்டி யுட்கொண்டுவர கிரஹணி, குல்மம் தீரும். அக்நி தீபனம் அதிகரிக்கும்.

இந்துகாந்த கிருதம் (ஸஹஸ்ர யோகம்)

ஆயில்ய மரப்பட்டை, தேவதாரு, தசமூலம் இப்பன்னி ரண்டும் வகைக்குப் பலம் 2 இடித்துப் பானையிலிட்டு 8 படி ஜலம் விட்டு 1 படியாய்ச் சுண்டவைத்து வடிகட்டி, அதில் பசும்பால் 1 படி, நெய் 1 படி கலந்து பஞ்சகோலம், யவா க்ஷாரம் இவ்வாறையும் $\frac{1}{4}$ பலம் வீதம் கல்கமாக வரைத்துக் குழப்பிக் காய்ச்சி வடிகட்டி யுட்கொள்ள வாதம், க்ஷயம், மகோதரம், குல்மம், சூலை, விஷம ஜ்வரம் தீரும். பலமுண் டாகும்.

தாங்வந்தர கிருதம் (கத நிக்ரஹம்)

தசமூலம், இருவகைப் புங்கு, தேவதாரு, கடுக்காய், புநர்நவத்துவயம், மாவலிங்கம், தந்திமூலம், சித்ரமூலம், கடம்பு, நீர்க்கடம்பு, வில்வம், எருக்கம்வேர், கள்ளி, சேங் கொட்டை, பூலாக்கிழங்கு, புஷ்கரமூலம், திப்பிலிமூலம் இவை வகைக்குப் பலம் 10 உரலிலிட்டுப் பஞ்சுபோலிடித்துப்

பெரும்மட் பாண்டத்திலிட்டு, இவைகளுக்கு எண்மடங்கு சுத்த ஜலம்விட்டு யவை படி 1, கொள்ளு படி 1, இலந் தைப் பழம் அல்லது வத்தல் படி 1 தனித்தனி இடித்து துணியில் தளரக்கட்டி மேற்படி கஷாயபாணையில் டோலா யந்திரமாய் தொங்கவிட்டு, அடுப்பிலேற்றி மிருதுவாக எரித்து எட்டிலொன்ருகச் சுண்டக்காய்ச்சி, ஆறினபின் பிசைந்து வடி கட்டிச் சமன் நெய்கூட்டி திரிபலை, சிறுதேக்கு, யானைத் திப் பிலி, சுக்கு, விடங்கம், செம்மரம், வசம்பு, செவ்வியம், கம்பில் லம் இவைகள் வகைக்கு 1 பலம் அரைத்துக் கல்கமாகக் கூட்டிக் காய்ச்சி வடிகட்டி யுபயோகிக்க குஷ்டம், பிரமேகம், குல்மம், வாதசோணிதம், வீக்கம், ப்லீஹா ரோகம், உதர ரோகம், மூலம், அபஸ்மாரம், உன் மாதம், வித்ரதி, பிடகம் முதலியவைகளை நன்ருய்க் கண்டிக்கும். அஷ்டாங்க ஹிரு தயத்திலும் மலையாள ஸஹஸ்ர யோகத்திலும் கஷாய சரக்கு களுள் சித்ரமூலம், வில்வம் இவ்விரண்டும் கூறப்படவில்லை. கல்கங்களுள் சிவதை, அரிசித் திப்பிலி, நீர்வஞ்சி சேர்க்கப் பட்டிருக்கின்றன.

கல்யாண கிருதம் (சரக ஸம்ஹிதை)

திரிபலை, பேய்த்தும்மட்டி, பேரேலம், தேவதாரு, ஏல வாலுகம், நன்னாரித்வயம், ஹரித்ரா த்வயம், ப்ருச்னி த்வயம், ஞாழல், தகரைவிதை, ப்ருஹதீ த்வயம், கோஷ்டம், மஞ்ஜிஷ்டி, சிறுநாகப்பூ, மாதளை, வாய்விளங்கம், தாளீச பத்திரி, சிற்றே லம், மல்லிகை மலர், நீலோத்பலம், தாமரை, தந்திமூலம், சந்தனம் இவைகள் $\frac{1}{4}$ பலம் வீதம் நிறுத்து, உரலிலிட்டு விடித்து, ஒருபடி நெய்யிலிட்டுக் காய்ச்சி வடித்து உட் கொள்ள, பிரபல பண்டிதர்களால் அசாத்தியமென விடப் பட்ட பூத, கிரஹ, உன்மாத, அபஸ்மார தோஷங்கள், காசம்,

விஷபாண்டு, தினவு, சோபை, மேகம், ஜ்வரம், கரவிஷம் முத லிய கொடூர ரோகங்கள் தீரும். மேலும் இந்த உத்தமமான கல்யாண கிருதத்தால் புத்தி, ஞாபக சக்தி, காந்தி, பலம், ஆயுள் விர்த்தியாகும்.

மஹா கல்யாண கிருதம் (சரக ஸம்ஹிதை)

கல்யாணகிருத யோகத்தில் நன்னாரி முதல் உள்ள சரக்கு களை எல்லாம் இடித்துப் பொடித்து 4 பங்கு ஜலம்விட்டு, எட்டிலொன்றாகச் சுண்டவைத்து வடிகட்டி அத்துடன் நெய் படி 1, தலையீத்துப் பசும்பால் படி 4 சேர்த்து விலாமிச்சம் வேர், காகோலீ த்வயம், பர்ணீ த்வயம், மேதா த்வயம், பூனைக் காலிவிதை, ஆடுதீண்டாப்பாளை இவைகளை கல்கமாகக் கூட்டி, காய்ச்சி வடிகட்டிக் கொள்வதே மஹா கல்யாணகிருதமெனப் படும். இம்மருந்தின் குணம் கல்யாணகிருதத்தின் குணங் களே யெனினும் அதனைவிட வியாதிகளை சீக்கிரத்தில் போக் கும் திறத்ததாம் என்க.

குமார கல்யாண கிருதம் (பைஷஜ்ய ரத்நாவளி)

நெய் 1 பிரஸ்தம், கண்டங் கத்திரி ஸமூல கஷாயம் 1 பிரஸ்தம், பசும்பால் 4 பிரஸ்தம் ஒன்றாகக்கூட்டி அதில் வெள்ளைக் காக்கட்டான் வேர், வசம்பு, வல்லாரை, கோஷ் டம், நிலப்பூசனிக் கிழங்கு, சிற்றாமுட்டி வேர், கிச்சிலிக் கிழங்கு, பூனைக்காஞ்சோரி வேர், பில்வ வேர், மாதுளை வேர், துளசி காஷ்டம், பேராமல்லி, கோரைக்கிழங்கு, தாமரைக் கிழங்கு, சிற்றேலம், யானைத்திப்பிலி வகைக்குப் பலம் $\frac{1}{4}$ கல்கமாக வரைத்துக் குழப்பிக் காய்ச்சி, மெழுகு பதத்தில் வடித்து வைத்துக்கொண்டு பாலர்களுக்குக் கொடுத்து வர, தவிழ்தல், பல் முளைத்தல், அன்ன ப்ராசம் முதலிய காலங்

களில் பாலர்களுக் குண்டாகும் பற்பல வியாதிகளேயும், கிரஹ பீடைகளேயும் போக்கி, சுகம், பலம், புஷ்டி, தீபனம், லக்ஷ்மி கரம் முதலியவைகளேத் தரும். கத நிக்ரஹத்தில் வெட்டி வேர், வட்டத்திருப்பி, நெருஞ்சில், அதிவிடயம், வாய் விளங் கம், தேவதாரு, மல்லிகை மலர், இலுப்பை மலர், கர்ஜூரம், இலந்தைப் பழம், மூங்கிலுப்பு இவைகளேயும் கல்கமாகக் கூட்டிச் செய்யும்படி கூறப்பட்டிருக்கிறது.

பல கல்யாண கிருதம் (பைஷஜ்ய ரத்நாவளி)

நெய் படி 1, தண்ணீர்விட்டான் கிழங்குச் சாறுபடி 4, பசும்பால் படி 4 ஒன்ருய்க் கலந்து மஞ்சிஷ்டி, அதிமதுரம், கோஷ்டம், திரிபலே, சர்க்கரை, சித்தாமுட்டி, அமுக்கிராக் கிழங்கு, ஓமம், மஞ்சள், மரமஞ்சள், காயம், கடகரோஹிணி, அல்லிக்கிழங்கு, செங்கழு நீர்க்கிழங்கு, திராக்ஷை, சந்தன த்வயம், ஜீவனீய அஷ்டவர்க்கம் வகைக்குப் பலம் $\frac{1}{4}$ கல்க மாக வரைத்துக் குழப்பிக் காய்ச்சி வடிகட்டி, ஸ்திரீகளுக்குக் கொடுத்து வர யோனி தோஷம், ரஜோ தோஷம், கெர்ப்பா சய தோஷம் முதலியவைகள் நீங்கி, பலம், புஷ்டி, சந்தா னம் உண்டாகும். இது கர்ப்பச் சின்னம், மிருதப்ரஸவம், முதலியவைகளேயும் போக்கும். தீர்க்காயுட் சந்தானத் தைத் தரும். இத்துடன் வெள்ளேக் கண்டங் கத்திரியை சேர்ப்பது சாலச்சிறந்தது. இதனேயே பல கிருதமெனவும் கூறுவர்.

பஞ்சகோல கிருதம் (ஆ. மு.)

இதனே க்ஷீரஷட்பல கிருதமெனபிருந்தமாதவம் கூறும். இம்முறையினே கவிராஜ சேகரம் கிருத ப்ரகரணம் ஐந்தாம் பக்கத்தில் காண்க.

(வேறு) பிருங்காமலக தைலம் (ஸஹஸ்ர யோகம்)

கரிசாலைச்சாறு, நெல்லிக்காய்ச்சாறு, நல்லெண்ணெய் வகைக்குப் படி 1, பசும்பால் படி 4, அதிமதுரம் பலம் 1 கூட்டிக் காய்ச்சிப் பதத்தில் வடித்து ஸ்நானம் செய்து வர பார்வைக் குறைவு, காது மந்தம், பீநஸம் தீரும்.

மஹா மாஷத் தைலம் (பை. ர.)

உளுந்து 2 படி, தசமூலம் 50 பலம், வெள்ளாட்டு மாம்ஸம் 30 பலம் இவைகளை 16 படி ஜலத்திலிட்டு வேக வைத்து 4 படியாய்ச் சுண்டியா றினபின், பிசைந்துப் பிழிந்து வடி கட்டி, 1 படியாய்ச் சுண்டக் காய்ச்சி அதில் நல்லெண் ணெய் படி 1, பசும்பால் படி 4 கூட்டி பூனைக்காலி விதை, ஆமணக்கு வேர்ப்பட்டை, சதகுப்பை, லவணத்ரயம், ஜீவ னீயகணம், மஞ்சிஷ்டி, செவ்வியம், சித்ரமூலத்வயம், திரிகடு, திப்பலிமூலம், சித்தரத்தை, அதிமதுரம், இந்துப்பு, தேவ தாரு, சீந்தில், கோஷ்டம், அமுக்கிராக் கிழங்கு, வசம்பு, கிச்சிலிக்கிழங்கு இவைகள் வகைக்கு $\frac{1}{8}$ பலம் பாலிலரைத்துக் குழப்பி மிருதுவாக வெரித்துப் பதத்தில் வடித்துக்கொள்க.

தூர்வாதி தைலம் (ஆ. மு.)

அருகங்கட்டைக் கஷாயம் 1 படி, தேங்காயெண்ணெய் $\frac{1}{4}$ படி கூட்டி அதிமதுரம் 1 பலம் கல்கமாக வரைத்துக் குழப்பி, மிருதுவாக வெரித்துப் பதமாய் வடித்து, ஸ்நானஞ் செய்து வர விஸர்ப்பம், தீப்புண், படை, தினவு தீரும்.

கந்தகத் தைலம் (ஆ. மு.)

கந்தகம் 6 தோலா, மிளகு 3 தோலா, மஞ்சள் 1 தோலா இவைகளைத் தனித்தனியாய்ப் பொடித்து 1 வீசை

தேங்காயெண்ணெயிலிட்டுக் காய்ச்சிப் பதத்தில் வடி கட்டிக் கொள்க. மேற்பூச்சினுல் சொரி, சிறங்கு, படை, ஊறல், ரணம் தீரும்.

விஷ முஷ்டித் தைலம் (பஸவ ராஜீயம்)

ஏரண்ட தைலம் 1 படி, நல்லெண்ணெய் 2 படி, எட்டிப் பழச்சாறு 1 படி, எலுமிச்சம் பழச்சாறு 2 படி, காடி 3 படி இவைகளை ஒன்ருய்க் கூட்டி எட்டிக்கொட்டைக் கல்கம் 16 பலம் சேர்த்துக் குழப்பி அடுப்பிலிட்டுக் காய்ச்சி, மெழுகு பதத்தில் வடித்து ஸர்வாங்கமும் பூசிப்பிடிக்க ஸந்தி வாதம், அஸ்தி வாதம், ஆம வாதம், தனுர் வாதம், ஸர்வாங்க வாதம், ஊர்த்வ வாதம் முதலியவனேக வாத ரோகங்கள் தீரும்.

குக்குலு பஞ்சக தைலம் (ஸஹஸ்ர யோகம்)

வெள்ளைக் குங்கிலியம், பால் சாம்பிராணி, மட்டிப் பால், கொம்பரக்கு வகைக்குப் பலம் 10, மைசாக்ஷி பலம் 20, இவ்வைந்தையும் வாலையிலிட்டு எரிக்க தைல மிறங்கும். இதனைப் பூசி வர சிரோபாரம், தலைவலி, தேகக்கடுப்பு, வாத ரோகம் தீரும். இதனை கௌசிகத் திராவகமெனவும் கூறுவர். இதனை வெங்கடரமண வைத்தியசாலையில் உபயோகப் படுத்துகின்றனர்.

கர்ப்பூராதி தைலம் (ஆ. மு.)

கர்ப்பூரம் 1 பலம், ஓமம் 4 பலம், தேங்கா யெண்ணெய் 1 சேர் கூட்டிக் காய்ச்சி வடித்துக் கொள்ளவும். இதனை சசிஸாரத் தைலமெனவுங் கூறுவர். ஓமத்திற்குப் பதில் ஓம உப்பு சேர்த்து, கரைந்தபின் எண்ணெய் கூட்டிக் குலுக்கி வைத்துக் கொள்வாருமுளர்.

அஷ்டாக்ஷர குடிகா (ஆ. கல்.)

அபின், சந்தனத்வயம், ஜாதிக்காய், திப்பிலி, காயம், அதிவிடயம், லிங்கம் இவ்வெட்டும் வகைக்குப் பலம் 1, இவைகளைச் சுத்தி செய்து பொடித்துக் கூட்டி சுக்கு, ஜீரகம், ஓமம், மல்லி, காஞ்சோரிவேர், கோரைக்கிழங்கு இவைகளின் கஷாயத்தால் 4 ஜாமமும், எலுமிச்சம் பழச்சாற்றால் 4 ஜாமமும் நன்றாயரைத்துக் குன்றியளவுக் குளிகை கட்டி நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்க. தயிரில் கொள்ள அர்சஸ் தீரும். மோரில் கொள்ள தீபனமுண்டாகும். தேனிற் கொள்ள அதிஸாரந் தீரும். வெட்டிவேர், நிலவேம்பு, மரமஞ்சள் கஷாயத்தில் ரக்தாதிஸாரந் தீரும். பஞ்சகோலக் கஷாயத்தில் கொள்ள தீபன பாசன சக்தி அதிகரிக்கும். கொள்ளு, இலந்தை, முஸ்தா மருதாணி கஷாயத்தில் சூலை தீரும். வசம்பு, வில்வம், கோரைக்கிழங்கு, சுக்கு, ஜீரகம் இவைகளின் கஷாயத்தில் வயிற்றுப் பொருமல் தீரும். திரிகடு, நெற்பொரி கஷாயம், முக்காவேளை, வசம்பு, முத்தம், கிச்சிலிக்கிழங்கு, நிலவேம்பு, வெட்டிவேர் இவைகளின் கஷாயம், கழுநீர், தேன் முதலியவைகளில் ஏதாவதொன்றில் கொள்ள விஷபேதி தீரும் நன்னாரிவேர், ஓமம், ஜீரகம் சேர்ந்த கஷாயத்தில் மூலவாய்வு, மூலக்கடுப்பு, ரக்தாதிஸாரம் தீரும். குக்ஷிரோகங்கள் யாவும் இம்மருந்தால் தீரும். கிரஹணி, அதிஸார ரோகங்களைக் கண்டிப்பதில் இம்மருந்து சிறந்ததாகும்.

பில்வாதி குடிகா (வடி.) (அஷ்டாங்க ஹிருதயம்)

வில்வவேர், துளசிக்கதிர், புங்கம்விரை, தகரைவிரை, தேவதாரு, திரிபலை, திரிகடு, ஹரித்ரா த்வயம் இவைகளைச் சமனாய்க் கூட்டி வெள்ளாட்டு மூத்திரத்தாலரைத்து மாத்திரை

செய்து நிழலில் உலர்த்தி வைத்துக்கொள்ளவும். இதனை பான, அஞ்சன, நஸ்ய, லேபனம் முதலிய கிரியைகளில் பிரயோகிக்க பாம்பு, எலி, லூத, தேள் முதலிய ஜங்கம விஷங்களும், மற்றுமுள்ள ஸ்தாவர, கர, விஷங்களும், பூத, பைசாச தோஷங்களும், அஜீர்ணம், விஷூசி முதலிய பிணிகளும் குணமாகும்.

தாங்வந்தர வடி (ஸர்வரோக சிகிச்சா ரத்னம்)

சுக்கு, கடுக்காய்த்தோல், ஜீரகம், நிலவேம்பு, ஏலரிசி, முள்ளிவேர், குரோசாணி ஓமம், புத்தரிச் சுண்டைவேர், வால் மிளகு, ருத்ருக்ஷம், தேவதாருக்கட்டை வகைக்கு அரைப் பலம் இவைகளை காயவைத்துப் பொடித்துக் கல்வத்திலிட்டு பச்சைக் கர்ப்பூரம், கண்டி வெண்ணெய், புனுகு வகைக்கு அரைப்பலம் சேர்த்து கஸ்தூரி $\frac{1}{8}$ விராகனிடைக் கூட்டி முதலில் ஜீரகக் கஷாயத்தாலும், பிறகு பன்னீர்விட்டும் அரைத்து குன்றியளவு மாத்திரை செய்து நிழலில் உலர்த்தி வைத்துக்கொள்ளவும். இக்குளிகையில் ஒன்றிரண்டு வீதம் சித்தரத்தைக் கஷாயம், வெற்றிலைச்சாறு, தேன், ஜீரகக் கஷாயம் முதலிய அனுபானங்களில் உட்கொள்ள சுக ஸன்னி பாதம், சுவாசரோகம், ஹிருதய பலஹீனம், விக்கல் இவைகள் தீரும். கர்ப்பிணிகள் இதனை 8-வது மாதம் முதல் உபயோகித்து வந்தால் சுகப் பிரஸவமாகும். பிரஸவித்த பின் இதனை தாங்வந்தர கஷாயத்தில் 10 நாள்கள் உபயோகிக்க சூதகச்சிக்கலினால் ஏற்படக்கூடிய கிரஹணி முதலான ரோகங்களை வர வொட்டாமல் தடுக்கும்.

கோரோஜனைக் குளிகை (ஸஹஸ்ர யோகம்)

கோரோஜனை $\frac{1}{4}$ தோலா, வாளம் $\frac{1}{4}$ தோலா, குங்குமப்பூ, திரிகடு வகைக்கு $\frac{1}{8}$ தோலா இவைகளைப் பொடித்துக் கூட்டி

பாகலிலைச் சாற்ருல் 4 ஜாமமரைத்துப் பின் வெற்றிலைச் சாற்ருல் 4 ஜாமமரைத்து குன்றிபோல் குளிகைகட்டி யுலர்த்தி 1 மாத்திரை சீனி, முலைப்பால், மாந்த ஜ்வர் ஹர கஷாயங்களிலுட்கொள்ள மலத்தைக் கழித்து மாந்தம், ஜ்வரம், தோஷம் போக்கும். வெங்கடரமண வைத்தியசாலையில் உபயோகித்து வரும் முறை இதுவே.

கஸ்தூர்யாதி குடிகா (ஸஹஸ்ர யோகம்)

கஸ்தூரி, நிலவேம்பு, சித்தரத்தை, புனுகு, காந்தம், பச்சைக்கர்ப்பூரம், ஜாதிக்காய், க்ஷாரத்வயம், திரிபலை, திரிஜாதம், இருவி, ஜீரகத்வயம், ஓமம், அக்கிராகாரம், சதகுப்பை, அதிமதுரம், கிராம்பு, காவிக்கல், வெட்டிவேர், நறும்பிசின், பாங்கிப்பட்டை, வசுவாசி, சந்தனம், வசம்பு, வால்மிளகு, திரிகடு, வெங்காரம், ரஸாஞ்சனம், நாபி, மனோசிலை, லிங்கம், ஆளிவிரை இவைகள் யாவும் சமனெடையாய் முறைப்படி கூட்டிச் சுத்த ஜலம், கரிச்சாலைச்சாறு இவைகளில் ஒன்ருல் நன்ருய் பிசின் போலரைத்து குன்றிப் பிரமாணம் குளிகை செய்துலர்த்தி வைத்துக்கொள்க. ஜ்வரம், ஸந்நிபாதம், மாந்தம், வலிப்பு, இசிவு, கபக்கட்டு முதலிய பிணிகள் தீரும். ஜீரக கஷாயத்தில் கொள்ள வாய்வு தீரும். இதனை வாயுக் குளிகை எனவும் மலையாளிகள் கூறுவர். இருவிக்குப் பதில் கல்நார் சேர்த்துச் செய்வாருமுளர். சர்ஜி க்ஷாரத்திற்குப் பதில் கரியுப்புக் கூட்டிச் செய்வது வெங்கடரமண வைத்திய சாலை சம்பிரதாயமென்க.

நீரூர்யாதி வடி (ஸஹஸ்ர யோகம்)

நீரூரி, ஏகநாயகம்வேர், தேற்ருங்கொட்டை, புளியங் கொட்டைத் தோல், திரிபலை, விளாம்பிசின், அல்லிவிரை, காந்தப், காவிக்கட்டி, மஞ்சள், மரமஞ்சள், சந்தனம், கல்

கண்டு இவைகளை சமனெடைக் கூட்டி அத்திப்பட்டைச் சாற்ருல் 7 நாளரைத்து இலந்தைக்கொட்டை பிரமாணம் மாத்திரை செய்து நிழலிலுலர்த்தி; அத்திப்பட்டை கஷாயத் தில் உபயோகித்துவர மேக கணங்கள் தீரும்.

ச்வாஸானந்த குடிகா (ஆ. கல்.)

சுத்திசெய்த லிங்கம், நாபி, பச்சைக் கர்ப்பூரம் இம்மூன் றையும் சமனுய்க் கூட்டி திரிபலே கஷாயத்தால் நாலு ஜாம மரைத்து குன்றியளவு குளிகைச் செய்துக்கொள்க. முலைப் பாலில் சீனி கலந்து அதில் 1, 2 குளிகை காலே, மாலே 3 நாள் கொடுக்க காசம், சுவாசம், க்ஷயம், விக்கல் தீரும். ஜ்வரம், தலைவலி, சிரோபாரம், ஜலதோஷம் முதலிய பிணிகளேயும் போக்கும்.

ஜ்வர முராரி (ஆ. மு.)

சின்கோனப்பட்டை தோலா 3, ஏலக்காய் தோலா 3, திரிகடு தோலா 3, நிலவேம்பு தோலா 1, கடகரோஹணி தோலா 1, பொரித்த வெங்காரம் தோலா 1 இவைகளைத் தனித்தனியாய்ப் பொடித்து வஸ்திரகாயஞ் செய்துக் கல்வத்தி லிட்டுப் பழச்சாற்ருல் 4 ஜாமம் நன்ருயரைத்து, மெழுகு பதத்தில் குன்றியளவு குளிகைச் செய்து, உலர்த்தி வைத்துக் கொண்டு 2, 3, 4 குளிகையை இஞ்சிச் சாற்றிலாவது, மிளகு கஷாயத்திலாவது தினம் 2, 3 வேளே கொடுத்து வர பற்பல விஷம ஜ்வரங்கள் தீரும்.

பல்லாதக வடி (ஆ மு.)

பாவ ப்ரகாசத்தில் கூறியுள்ள திலாதி மோதகத்தையே பல்லாதக வடி என கவர்ண்மெண்ட் இண்டியன் ஸ்கூலில் வழங்கி வருகின்றனர். இதனை கவிராஜசேகரம் வடக வர்க் கம் பதின்மூன்ரும் பக்கத்திற் காண்க.

சந்தனுதி வடி (ஆ. மு.)

பரங்கிப்பட்டை பலம் 3, வால்மிளகு பலம் 3, ருமஸ் தகி பலம் 1, வேலன் பிசின் பலம் 1, வாழைச் சரகு சாம்பல் பலம் 1 இவைகளைத் தனித்தனியாய்ப் பொடித்து வைத்துக் கொள்ளவும். முதலில் வேலம் பிசினைச் சுத்த ஜலம் விட்டரைத்துப் பின் ருமஸ்தகித் தூளைக்கூட்டி யரைத்து மற்ற தூள்களையும் ஒவ்வொன்றாய்க் கூட்டி யரைத்து நிழலில் ஆற வைத்து கொஞ்சம் உலர்ந்த பின் குங்கிலியத் தைலம் பலம் 1, சந்தனத் தைலம் பலம் 1 கூட்டியரைத்துக் குன்றியளவு குளிகை செய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு 1, 2 வீதம் தக்க வனுபானங்களில் தினம் 2, 3 தடவை சாப்பிட்டு வர வெட்டையையும் அதன் பற்பல வுபத்திரவங்களையும் போக்கும்.

கோரோஜனாதி குடிகா (ஸர்வரோக சிகித்ஸா ரத்னம்)

கோரோஜனை, பச்சைக்கர்ப்பூரம், புனுகு, அம்பர், தங்க ரேக்கு, நற்பவழம், அஞ்சனக்கல், பொரித்த வெங்காரம், ருத்ருக்ஷம், மான் கொம்பு, பஞ்ச சிருங்கம், சந்தணத்தூள், விலாமிச்சம் வேர், கோரைக் கிழங்கு, நீர்க் கோரைக் கிழங்கு, பெருங்கிழங்கு, பருத்திக்கொட்டைப் பருப்பு, பீனரிக் கட்டை, முன்னை வேர், காட்டுமல்லி வேர், சங்கபுஷ்பம் வேர், அவுரி வேர், நாயுருவிக் கொழுந்து, பூண்டு, திரிகடு, திரிபலை, வட்டத்திருப்பி, ஜாதிக்காய், மாசிக்காய், சதகுப்பை, ஜீரகம், கருஞ் ஜீரகம், சிறுநாகப்பூ, வசம்பு, நிலவேம்பு, கடல் தேங் காய், தும்பைப்பூ, ஓமம் இவைகளை வகைக்கு ஒரு விராகனெடை வீதம் தயாரித்துக் கொள்க. இவைகளுள் கடை சரக்குகளையும் வேர்களையும் இடித்துச் சூர்ணித்தும் கொம்பு களையும், ருத்ருக்ஷத்தையும் சந்தணக் கல்லில் இஞ்சிச்சாறு

விட்டு இழைத்து எடைப் பிரகாரம் தயாரித்துக் கொள்க. பவழத்தையும், தங்க ரேக்கையும், அஞ்சனக் கல்லையும் கல்வத்திலிட்டு இஞ்சிச் சாற்ருல் வெண்ணெய் போலரைத்து அத்துடன் புனுகு, அம்பர், கோரோஜனை, பச்சைக்கர்ப்பூரம் இவைகளைக் கூட்டியரைத்துப் பின்பு நாயுருவிக் கொழுந்து, தும்பைப்பூ, பூண்டு, பருத்திப் பருப்பு, வெங்காரப் பொரி இவைகளை முறையே கூட்டியரைத்துப் பின்னர் மற்ற சூர்ணங்களைச் சேர்த்து இஞ்சிச் சாற்ருல் 1 வாரம் அரைத்தரைத்துப் பாவனை செய்து உளுந்து பிரமாணம் மாத்திரை செய்து நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்க. இதில் 1, 2 வீதம் தக்க வனுபானங்களில் உபயோகிக்க ஜ்வரம், தோஷம், ஸன்னி பாதம் தீரும். ஜ்வரத்தினு லேற்படும் தாஹம், தாபம், திருஷ்ணு, பிரக்ஞாபங்கம், பிரமை, மூர்ச்சை, பிரலாபம், தாந்திரீகம், காதுமந்தம் முதலிய எல்லா விகாரங்களையும் போக்கும். முலைப்பால், தேன், இஞ்சிச்சாறு முதலியவைகள் அனுபானங்களாகும். ஸன்னிபாதத்தில் தும்பைப்பூ, ஜீரகம், கொத்தமல்லி விரை இம்மூன்றினையும் சேர்த்துச் செய்த கஷாயத்தில் கொடுக்கச் சாலச்சிறந்தது. சாதாரண ஜ்வரத்தில் தேன், முலைப்பால், சித்தரத்தைக் கஷாயம் இதுகளை உபயோகிக்கலாம்.

பிரதாப லங்கேச்வரம் (ரஸயோக ரத்நாகரம்)

நிலவேம்பு, கோரைக் கிழங்கு, பர்ப்பாடகம் வகைக்குப் பலம் 1, இவைகளை இடித்துச் சூர்ணித்துக் கல்வத்திலிட்டு, கட்வங்காதி க்ஷாரம் பலம் 1 கூட்டி வேப்பம்பட்டைச் சாற்ருல் 4 ஜாமமரைத்துக் குன்றிப்போல் குளிகை செய்துக் கொள்ளவும். க்ஷாரத்திற்குப் பதில் க்வினைன் $\frac{1}{8}$ பலம் கூட்டிச் செய்வது தர்ம வைத்யசாலைகளின் வழக்கம். இது

பற்பல விஷம ஜ்வரங்களை நன்கு கண்டிக்கும். திராக்ஷைப் பழ கஷாயம் அனுபானமாக உபயோகிக்கவும்.

புநர்நவாதி மண்டூரம் (பை. ர.)

வெள்ளைச சாட்டறணைவேர், சிவதைவேர், திரிகடு, வாய் விளங்கம், தேவதாரு, சித்ரமூலப் பட்டை, புஷ்கர மூலம், திரிபலை, ஹரித்ரா த்வயம், தந்தி பீஜம், செவ்வியம், வெட் பாலை யரிசி, கடகரோஹணி, திப்பிலி மூலம், கோரைக் கிழங்கு இவ்விருபதும் வகைக்குப் பலம் 1, சுத்தி செய்த மண்டூரம் பலம் 40 இவைகளைத் தனித்தனியா யிடித்துப் பொடித்துக் கூட்டி இதற்கு 8 மடங்கு கோமூத்திரங் கூட்டி அடுப்பிலிட்டு மிருதுவா யெரித்துச் சுண்டினபின் அத்திக்கா யளவு வடகம் செய்து ரவியிலுலர்த்திக் கிருத பாண்டத்தில் வைத்துக்கொள்ளவும். மோரிலிதனை காலை, மாலை 1, 2 வீதம் உட்கொண்டு வர பாண்டு, சோபை, காமாலை, ஊருஸ் தம்பம், கபம், மூலம், மேகம், ப்லீஹம், ஜ்வரம் தீரும். இரத்த சுத்தியும் இரத்த விர்த்தியுமுண்டாம்.

சோதாரி மண்டூரம் (பை. ர.)

கோமூத்திரத்தில் பாகஞ் செய்த மண்டூரத்தை நொச்சி, இஞ்சி, காட்டுக்கறணை சாறுகளால் பாவனை செய்துத் தயாரித் துக்கொள்ளவதேயாம். திரிபலை, திரிகடு, செவ்வியம் இவை கள் வகைக்குப் பலம் 1, பாவனை செய்த மண்டூரம் பலம் 14 இடித்துப் பொடித்துக் கூட்டி 8 மடங்கு கோமூத்திரத்தில் வேகவைத்துச் சுண்டின பின் 2 பலம் தேன் விட்டரைத்து இலந்தைப் பழமளவு வடகஞ்செய்து உலர்த்தி வைத்துக் கொண்டு 1, 2 வீதம் தக்க வனுபானத்திலுபயோகிக்க பற்பல காரணங்களால் உண்டாகும் சர்வாங்க வீக்கத்தை அதி சீக்கி ரம் வடித்துவிடும்.

பிருஹத் யோகராஜ குக்குலு (பை. ர.)

திரிகடு, திரிபலா, வட்டத் திருப்பி, சதகுப்பை இரு வகை மஞ்சள், ஓமம், வசம்பு, காயம், கொட்டைக் கரந்தை, யானைத் திப்பிலி, கருஞ் ஜீரகம், கிச்சிலிக் கிழங்கு, மல்லி, பிடாலவணம், இந்துப்பு, கறியுப்பு, திப்பிலி மூலம், சாதுர் ஜாதம், அபின், லோஹ சிந்தூரம், ஸர்ஜரஸம், நெருஞ்சில், அரத்தை, அதிவிடயம், சுக்கு, யவாக்ஷாரம், சரக்கொன்னைப் புளி, சித்ரமூலம், புஷ்கரமூலம், செவ்வியம், புளி மாதளை, முத்துக்கொட்டைப் பருப்பு, அச்வகந்தி, சிவதை, தந்தி பீஜம், இலந்தை, தேவதாரு, மஞ்சள், கடகரோஹணி, பெருங் குரும்பை, கழற்சிப் பருப்பு, காஞ்சோரி வேர், வாய் விடங்கம், ஆடாதொடை, வங்க பஸ்மம், அப்ரக பஸ்மம், இவைகள் யாவும் சமனெடை, இடித்துப் பொடித்து வஸ்திரகாயஞ் செய்து, இச்சூர்ணத்திற்குச் சமனெடை சுத்தி செய்த மைசாக்ஷி கூட்டி நெய் சேர்த்துப் பிசைந்து ஒன்றுபடக் கலந்து ஸ்நிக்த பாண்டத்தில் எடுத்து வைத்துக் கொள்ளவும். கடிவாதம், ஏகாங்கவாதம், க்ருத்ரஸி, சந்திவாதம், க்ரோஷ்டுக சீர்ஷவாதம், அண்டவாதம் முதலான வாத ரோகம் 80, பித்த ரோகம் 40, கப ரோகம் 20, சிரோ ரோகம், குஷ்டம், வாத ரக்தம் முதலிய நோய்கள் தீரும்.

அசோகவடி (ஸஹஸ்ர யோகம்)

அரிசித் தவிடு பலம் 1, சுவர்ணமாக்ஷிக பஸ்மம் பலம் 1, அசோகப்பட்டை பலம் 2 இவைகளைப் பொடித்துக் கூட்டி அசோகப்பட்டைக் கஷாயத்தால் 4 ஜாமமும், நாகப்பட்டைக் கஷாயத்தால் 4 ஜாமமும், கழு நீரால் 4 ஜாமமும், பேயத்திப் பாலால் 4 ஜாமமும் அரைத்துக் குண்டுமணிப் பிரமாணம் குளிகைகட்டி 1, 2 வீதம் தேன், கழுநீர், அத்திப்பட்டைக்

கஷாயம், தென்னம்பாளைச்சாறு முதலிய வனுபானங்களில் கொடுக்க மாதவிடாய்ச் சம்மந்தமான சகல நோய்களும் தீரும். மலட்டை நீக்கிச் சந்தான சம்பத்தை யளிக்கும்.

அசோகாதி வடி (ஆ. மு.)

அசோகப்பட்டை ரஸ க்ரியை 4 பலம், காஸீஸ ஸிந்தூரம் 1 பலம் கல்வத்திலிட்டு அசோகப்பட்டைக் கஷாயத்தால் 4 ஜாமமரைத்துக் குன்றியளவு குளிகை கட்டி, நிழலிலுலர்த்தி 1, 2 வீதம் வெந்நீர், பால் முதலியவைகளி லுட்கொள்ள ருது தோஷங்களைக் கண்டித்துக் கருதரிக்கச் செய்யும்.

சாங்கேர்யாதி வடி (ஸஹஸ்ர யோகம்)

புளியாரை இலை, மாம்பருப்பு, கழற்சிப்பருப்பு, நாவல் கொழுந்து, மாதுளம் பழத்தோல், ஓமம், வசம்பு, சந்தனம், மிளகு, அதிவிடயம், கோரைக் கிழங்கு, ஜாதிக்காய், அபின், ஜாதிலிங்கம் இவைகளைச் சமனுய்ச் சேர்த்துக் கோரைக் கிழங்கு கஷயத்தால் 7 நாள் அரைத்து குண்டுமணிப் பிரமாணம் குளிகை கட்டி தேன் முதலிய வனுபானங்களில் கொடுக்க வலி, பொருமல், இறைச்சல், முக்கலுடன் கூடிய அதிசார, சீத ரக்த பேதிகளைக் கண்டிக்கும். இதில் அபின் சம்மந்தமிருப்பதால் குழந்தைகளுக்கு ஜாக்கிரதையாய் உபயோகித்தல் வேண்டும்.

புக்தஞ்ஜரி வடி (ஸஹஸ்ர யோகம்)

கொடிவேலி வேர்ப்பட்டை, காயம், வட்டத் திருப்பி, திரிகடு, பஞ்சலவணம், யவாக்ஷாரம், வாய்விடங்கம், ஓமம், கண்டத்திப்பிலி, பெருங் குரும்பை, கண்டங்கத்திரி வேர், ஜீரகம், செவ்வியம், மல்லி, வெள்ளைச்சாட்டறணை வேர் இவைகளைச் சமனுய்க் கூட்டிப் பொடித்துக் கல்வத்திலிட்டு, எலுமிச்சம்பழச் சாற்றுல் 12 ஜாமம் அரைத்துப் புளியங் கொட்

டைப் பிரமாணம் வடகஞ்செய்து 1, 2 வீதம் உட்கொள்ள வயிற்றுவலி, மார்வலி, அஜீர்ணம் முதலிய நோய்களைக் கண்டித்துப் பசி தீபனத்தை யுண்டுபண்ணும்.

டங்கணுதி வடி (ஸஹஸ்ர யோகம்)

வெங்காரம், வெடியுப்பு, காந்தம், ஸ்வர்ணமாக்ஷிகம், அபின், கழற்சிப்பருப்பு, பூண்டு, ஜீரகம், காயம் இவைகளைச் சமனுய்க் கூட்டி, இஞ்சிச் சாற்றுல் நன்ருயரைத்துக் குன்றியளவு மாத்திரை திரட்டி 1, 2 வீதம் தேன், வெந்நீர், இஞ்சிச்சாறு முதலிய வனுபானங்களில் கொடுக்கக் கிரஹணி, அதிசாரம், சூலை, குன்மம் தீரும்.

லோஹ ரஸாயனம் (பை. ர.)

மைசாக்ஷி, நிலப்பனங்கிழங்கு, திரிபலை, கருங்காலிக்கட்டை, ஆடாதோடை வேர், இலை, சிவதை வேர், நிலக்கடம்பை, நொச்சி வேர், சித்திர மூலம், கள்ளி வேர் வகைக்குப் பலம் 10 இவைகளை யிடித்து 20 படி ஜலம் விட்டு எட்டிலொன்ருய்ச் சுண்டக்காய்ச்சி, ஆறியபின் பிசைந்துப் பிழிந்து வடி கட்டிய கஷாயத்தில், சர்க்கரை 8 பலம் கூட்டி எஃகு விந்தூ-ம் பலம் 2 போட்டுக் காய்ச்சிப் பாகு பதத்தில் சிலாஜது, மிளகு, ரஸாஞ்ஜனம், அரிசித் திப்பிலி, திரிபலை, அன்னபேதி விந்தூரம் வகைக்குப் பலம் 2 பொடித்துப் போட்டு நெய் 16 பலம், தேன் 8 பலம் கூட்டிக் கிளரி தானிக்காய் பிரமாணம் வடகங்கள் செய்து காலை, மாலை ஒவ்வொரு வடகம் உட்கொண்டு பால் அருந்திவர வாதம், கபம், குஷ்டம், மேஹம், ஜ்வரம், காமாலை, பாண்டு, வீக்கம், பகந்தரம், மூர்ச்சை, மோஹம், விஷம், உன்மாதம், கரவிஷம், ஸ்தூல ரோகம், மேதோ ரோகம் தீரும். பலம், புஷ்டி, வாஜீகரணம், புத்திர சந்தானம், லக்ஷ்மீகடாக்ஷமுண்டாம். நரைதிரைமாறும்.

பூர்ண சந்திரோதய ரஸம் (பைஷஜ்ய ரத்நாவளி)

பூர்ண சந்திரோதயம் 1 தோலா, பச்சைக் கர்ப்பூரம், லவங்கம், ஜாதிக்காய், வால்மிளகு வகைக்கு $\frac{1}{4}$ தோலா, கஸ்தூரி 1 சாணம் இவைகளைத் தனித்தனியாய்ப் பொடித்துக் கல்வத்திலிட்டு, பன்னீர் விட்டரைத்து, குன்றிபோலுருட்டி யுலர்த்தி வைத்துக்கொண்டு, ஒரு மாத்திரை வீதம் வெற்றிலை யுடன் காலை, மாலை யுட்கொண்டு வர தாதுவிர்த்தி, இந்திரியக் கட்டு, புணர்ச்சி நிர்வாஹம் உண்டாகும். பலம், புஷ்டி, புத்தி, காந்தி, ஆயுள், ஆரோக்கியம் தரும். நரம்புகளை முறுக்கேற்றி போக சுகத்தையும், புத்திர சந்தானத்தையும் அளிக்கும். நரை, திரை போக்கும். தீபனபாசன மதிகரிக்கும். ஸ்தாவர, ஜங்கம, க்ருத்ரிம விஷங்களை நீக்கும். சொல்லப்புகின் க்ஷயம், காசம், சுவாசம்,மேகம், நீரிழிவு, குன்மம், சூலை, குஷ்டம், கண்டமாலை, பவுத்திரம், மேக ரணம், புண், கிரந்தி, வெட்டை, பாரிச வாய்வு, கீல் வாய்வு, மூலம், கிரஹணி, அதிஸாரம், ஜ்வரம் முதலியவெல்லா நோய்களையுங் கண்டிக்கும்.

சீத பஞ்சீ ரஸம் (ரஸேந்திர சிந்தாமணி)

ரஸம், கெந்தகம், லோஹ, தாம்பிர, வங்க சிந்தூரங்கள், சுக்கு, மிளகு, திப்பிலி இவ்வெட்டும் ஸமனெடை நாபி, பாதி எடைக் கூட்டி, இஞ்சிச் சாற்ருல் இரண்டு நாளரைத்து குன்றியளவு குளிகை கட்டி யுலர்த்தி வைத்துக்கொள்ளவும் இஞ்சிச் சாற்றில் ஒன்று, இரண்டு மாத்திரை கொடுக்க நவ ஜ்வரமும், வாதக் கிரஹணியும் தீரும். இஃதல்லாது மற்றும் அநேக பிணிகளையும் கண்டிக்குமென்க.

சுவாச குடாரம் (வைத்திய சிந்தாமணி)

சுத்தி செய்த ரஸம், கெந்தகம், நாபி, மனோசிலை, வெங்காரம் வகைக்குப் பலம் $\frac{1}{4}$, திரிகடு வகைக்குப் பலம் $\frac{1}{2}$ இவை

களை முறைப்படி கூட்டி யரைத்துப் பின்பு 2 பலம் மிளகை ஒவ்வொன்ருய்க் கூட்டி மை போலரைத்து வைத்துக்கொள்க. குன்றியளவு பற்பல வனுபானங்களில் கொடுக்க ஜ்வரம், ஸந்நி பாதம், சுவாசம், காசம், கபம், வாதம், அக்நிமந்தம் தீரும். வெற்றிலைச் சாற்றில் நசியமிட மூர்ச்சை, அபஸ்மாரம், மயக்கம், தலைவலி தீரும்.

வாத ராக்ஷஸ ரஸம் (வைத்திய சிந்தாமணி)

ரஸம், கெந்தகம், காந்தம், அப்பிரகம், தாம்பரம் இவைகளின் பஸ்மங்கள், வெள்ளைச் சாடறணை, சீந்தில், சித்திர மூலம், துளசி, திரிகடு இவைகளின் ஸ்வரஸம், கஷாயம் முதலியவைகளால் மும்மூன்று தினங்களரைத்து லகுபுட மிட்டு, பொடித்து வைத்துக்கொள்க. இதனில் 1, 2 குன்றியெடை வியாதிகளுக்கேற்ற வனுபானங்களில் கொடுக்க ஊரு ஸ்தம்பம், வாத ரக்தம், ஆம வாதம், தனுர் வாதம், சூலை வாதம், பக்ஷ வாதம், கம்ப வாதம், ஸந்தி வாதம், ஸுப்த வாதம், முதலான மஹா வாத ரோகங்களும், உன் மாதமும் தீரும்.

கிரஹணி வஜ்ர கபாட ரஸம் (பஸவ ராஜீயம்)

ரஸ பஸ்மம், அப்பரக பஸ்மம், கெந்தகம், யவாக்ஷாரம், வெங்காரம், முன்னைவேர், வசம்பு இவைகளைச் சமனுய்க் கூட்டிக் கஞ்சாச் சாற்ருல் 4 நாள், பழச் சாற்ருல் 1 நாள், கரிச்சாலைச் சாற்ருல் 1 நாள் அரைத்து, அடைதட்டி யுலர்த்தி லோஹ பாத்திரத்திலிட்டு மூடி சீலை மண் செய்து ½ ஜாமம் கமலாக்கினியா யெரித்து, ஆறவைத்தெடுத்து அதற்குச் சமன் அதிவிடய சூர்ணங்கூட்டி, இலவம்பிசின் ஜலம், விளாம் பிசின் ஜலம், கஞ்சா கஷாயம் இவைகளால் 7 தடவை பாவனை செய்துலர்த்திப்பின்பு, காட்டாத்திப்பூ, வெட்பாலை யரிசி,

கோரைக்கிழங்கு, லோத்திரப்பட்டை, அதிவிடயம், சீந்திற் கொடி இவைகளின் சாரத்தால் ஒவ்வோர் நாள் பாவனை செய்தரைத்து, உளுந்துப் பிரமாணம் மாத்திரை செய்து, உலர்த்தி வைத்துக்கொள்க. சித்ரமூலம், சுக்கு, வளையலுப்பு, வில்வம், இந்துப்பு இவைகளின் சூர்ணம், தேன் அனுபானங்களாகும். வாதாதி பற்பல கிரஹணி ரோகங்களை கண்டிக்கும்.

கர்பூராதி வடி (பை. ர.)

கவிராஜ சேகரம், மாத்திரை வர்க்கம், ஏழாவது பக்கத்தில் கூறியுள்ள கர்ப்பூர வடி யோகத்தில் அபினியை நீக்கி மற்றவைகளைக் கூட்டி யரைத்து மாத்திரை செய்துக் கொள்வதே கவர்ண்மெண்ட் இன்டியன் ஸ்கூலில் செய்து வரும் முறையாகும்.

ஸூதசேகர ரஸம் (யோக ரத்நாகரம்)

சுத்தி செய்த ரஸம், கெந்தகம், நாபி, ஊமத்தம் விரை, வெங்காரம், ஸ்வர்ண பஸ்மம், தாம்பர பஸ்மம், சங்க பஸ்மம், திரிகடு, சாதுர் ஜாதம், கிச்சிலிக் கிழங்கு, வில்வப்பழச் சதை இவைகளை ஸமாம்சமாய்க் கூட்டிக் கரிச்சாலைச் சாற்றால் 1 நாளாட்டி, குன்ஜாப் பிரமாணம் மாத்திரை திரட்டி யுலர்த்தி வைத்துக்கொண்டு 1, 2 மாத்திரை வீதம் தேன், நெய்யில் கொடுக்க ஆம்ல பித்தம், வாந்தி, சூலை, குன்மம், கிரஹணி, அதிஸாரம், மந்தாக்கினி, காசம், சுவாசம், விக்கல், ஜ்வரம், க்ஷயம் முதலிய எல்லாப் பிணிகளையும் போக்கும்.

மஹா வங்கேச்வர ரஸம் (யோக ரத்நாகரம்)

வங்க, காந்த, அப்பரக ஸிந்தூரங்கள், ஆவாரம்பூ இந் நான்கையும் சமனெடை கூட்டிக் குமாரி ரஸத்தாலரைத்து

7 தடவை பாவனைசெய்து குஞ்சாப் பிரமாணம் குளிகை கட்டி நிழலிலுலர்த்தித் தக்க வனுபானங்களி லுபயோகிக்கப் பிரமேகம், மூத்ர கிருச்ரம், ஸோம ரோகம், அச்மரி, பாண்டு தீரும்.

ராஜ மிருகாங்கம் (வைத்திய சிந்தாமணி)

சுத்தி செய்த ரஸம், தங்கம், கந்தகம் வகைக்குத் தோலா 1, நல்முத்து தோலா 2, டங்கண க்ஷாரம் தோலா 3, இவைகளை வரிசைக் கிரமமாய் கல்வத்திலிட்டுப் பொடித்துக் கழுநீர் ஜலத்தாலரைத்து உருண்டை செய்து வஸ்திரத்திலிட்டு முடிந்து லவணபாண்டத்தின் நடுவில் வைத்து மூடி 1 நாள் எரித்து ஆறவிட்டெடுத்து வல்லப் பிரமாணம் நெய், மிளகு, சூர்ணத்துடனாவது தேன், திப்பிலிச் சூர்ணத்துடனாவது உட்கொள்ள க்ஷயம், கிரஹணி, அக்கினிமந்தம் தீரும். விதாஹித் தன்மையுள்ள பண்டங்களை நீக்கி சீதள வஸ்துக்களையுபயோகித்தல் நலமென்க.

லோகநாத ரஸம் (பஸவ ராஜீயம்)

பலகரை தோலா 1, மண்டூரம் தோலா 1, எஃகு தோலா ½, ரஸ பஸ்மம் தோலா ¼, கந்தகம் தோலா ½ இவைகளை கல்வத்திலிட்டு மூக்கரட்டைவேர், பிரண்டை, ஆடாதோடை, பிரமி, சித்திர மூலம் இவைகளின் சாற்றால் மும்மூன்று நாள் அரைத்து வில்லை தட்டி வெய்யலிலுலர்த்திச் சட்டியிலிட்டு மூடிச் சீலைமண் செய்து, மந்தாக்னியாய் ஒரு நாள் எரித்து ஆறவிட்டெடுத்துக் கல்வத்திலிட்டுச் சூர்ணித்து, அதற்குச் சமன் மிளகுப் பொடியைக்கூட்டி வெற்றிலை, இஞ்சி, கரிசாலை, நொச்சி, கொட்டைக்கரந்தை, முருங்கை, திரிபலை இவைகளின் சாறுகளாலும், கஷாயத்தாலும் அரைத்துப் பாவனை செய்து, மறுபடியும் அரைத்துக் குன்றிப் பிரமாணம் குளிகை

கட்டி நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்ளவும். இதில் ஒரு மாத்திரை வீதம் ஜாமங்தோறும் தேனில் உட்கொண்டு வர வாதாதி தோஷங்களால் ஏற்படுகின்ற சகலவித க்ஷயம், காஸம், சுவாஸம், சோகை, பாண்டு, ஹலீமகம், பிரதிச்யாயம் முதலிய நோய்களைக் கண்டித்துத் தீபன பாசனத்தை விருத்தி செய்து பலம், புஷ்டி, வீர்யம் முதலியவைகளை அதிகரிக்கச் செய்யும்.

ரஸ பூபதி ரஸம் (பஸவ ராஜீயம்)

ரஸம், கந்தகம், நாபி, எஃகு, தாம்பரம் இவைகளைச் சுத்தி செய்து சமனெடையாய்க் கூட்டி சிறு செருப்படைச் சாற்றால் மூன்று நாள் நன்றாய் அரைத்து, உலர்த்திக் காசி குப்பியிலிட்டு, மூடிச் சீலமண் ஏழும் செய்துலர்த்தி வாலுகா யந்திரத்திலிட்டு மந்தாக்னியாய் பன்னிரண்டு ஜாமமெரித்து இஞ்சிச் சாற்றாலாட்டி உளுந்துப் பிரமாணம் மாத்திரை செய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு, இஞ்சிச் சாற்றில் அனுபானித்துக் கொடுக்க சகலவிதமான சோகை, பாண்டு இவைகளைக் கண்டிக்கும்.

த்ரைலோக்ய சிந்தாமணி ரஸம் (வைத்திய சிந்தாமணி)

ரஸம், அப்ரகம், தங்கம், வெள்ளி, தாம்பரம், மனோசிலை ஸ்வர்ணமாக்ஷிகம், கந்தகம், பவளம், முத்து, சங்கு, தாளகம் இவைகளை சமனாய்க் கூட்டிக் கொடிவேலிக் கஷாயத்தால் அரைத்து 7 பாவனை செய்துப் பின்பு நொச்சிச்சாறு, காட்டுக் கரணைக் கிழங்குச்சாறு, எருக்கம்பால் இம்மூன்றினால் ஒவ்வொரு நாள் அரைத்துப் பாவனை செய்து பலகரையில் அடைத்து வாயினை எருக்கம் பாலாலரைத்த வெங்காரத்தால் பூசி மூடி அகலிலிட்டு சீலமண் செய்துக் கஜபுடமிட்டு ஆறின

பின்பு எடுத்து அதற்குச் சமன் சூத பஸ்மமும் கால் பாகம் வைக்ராந்த பஸ்மமும் கூட்டி ஏழிலைப் பாலைவேர், முருங்கை வேர், லவங்கப்பட்டை, பேய்க்கரும்பு, கொடிவேலிவேர்ப் பட்டை, திரிபலை, வெங்காரம், மிளகு, கடுக்காய், ஜாதிக்காய், லவங்கம், திப்பிலி, சுக்கு, வெண்ணாபி, கருநாபி இவைகளைக் கால் பாகம் கூட்டித் துரிஞ்சிச் சாற்றால் நன்றாய் அரைத்துக் குன்றியளவு மாத்திரை செய்து, உலர்த்தி வைத்துக்கொள்க. இது எல்லா ரோகங்களையும் நாசஞ் செய்யக்கூடிய ஓர் சிறந்த மருந்து. தேஹ, தேச, கால, வயதுக்கேற்றவாறு கால், அரை, ஒரு குன்றியளவு தக்க வனுபானங்களில் கொடுக்க வாத வியாதி, ஆம வாதம், ஜ்வரம், உதரம், கிருமி, கரவிஷம், சூலை, வாத ரக்தம், ரக்த பித்தம், க்ஷீணம், க்ஷயம், காஸம், கப ரோகம், உரக்ஷதம், அஜீர்ணம், மேஹம், குஷ்டம், அதிஸா ரம், பாண்டு, கிரஹணி, தமகம், விரணம், மூலம், கஞ்ச வாதம், ஆட்ய வாதம், யோனி ரோகம், கர்ண ரோகம் முதலிய வெல்லா நோய்களையுங் கண்டிக்கும்.

தாளகேச்வர ரஸம் (பஸவ ராஜீயம்)

ரஸ, வங்க, லோஹ, அப்பரக பஸ்மங்களைச் சமனெடை யாய்க் கூட்டித் தேன் விட்டாட்டி, உளுந்துப் பிரமாணம் உண்டை செய்து, நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு 1, 2 வீதம் தேனிலாவது, அத்திப் பழத்திலாவது, உட்கொண்டு வர அதிமூத்திர ரோகத்தைக் கண்டிக்கும். பச்சைப்பயிர் கஞ்சி, மோர், நெல்லிக்காய் இவைகள் நலந்தருமென்க.

பால சூர்யோதய ரஸம் (பஸவ ராஜீயம்)

ரஸம் 1, கெந்தகம் 3, நாபி 3, தாம்பர பஸ்மம் 2, அய ஸிந்தூரம் 2, காயம் 4, அப்பிரக சிந்தூரம் 5, மிளகு 20

பங்குகளாகக் கூட்டி, ஜலம் விட்டரைத்துக் குன்றியெடை குளிகை செய்துக் கொள்ளவும். இது ஜ்வரம், காசம், சுவாசம், வாந்தி, பாண்டு, ப்லீஹம், பிரமேகம், க்ஷயம், மூலம், யோனி லிங்க தோஷம், ப்ரதரம், க்ருச்ரம் போக்கும்.

சங்கவடி (பஸவ ராஜீயம்)

புளியம்பட்டை, அரசம்பட்டை, கள்ளி, நாயுருவி, எருக்கு இவைகளைச் சுட்டுச் சாம்பலாக்கி ஜலத்தில் கரைத்துத் தெளிவிறுத்துக் காய்ச்சிய உப்புகள், பஞ்சலவணம் இம் பத்து வகை லவணங்கள் வகைக்குப் பலம் 2, சங்க பஸ்மம் பலம் $\frac{1}{2}$, லவங்கம் பலம் $\frac{1}{2}$, திரிபலை வகைக்குப் பலம் $\frac{1}{4}$ இவைகளைக் கல்வத்திலிட்டுப் பொடித்து, ஆம்ல ரஸங்களால் பாவனை செய்தரைத்து, குன்றியளவு யுபயோகித்து வர சூலை, குன்மம், வயிற்றுப் பொருமல், அஜீர்ணம், பேதி தீரும். தீபன, பாசன சக்திகளதிகரிக்கும்.

காளகூட ரஸம் (பஸவ ராஜீயம்)

சுத்தி செய்த நாபி 11 பங்கு, ரஸம் 3 பங்கு, கந்தகம் 5 பங்கு, மனோசிலை 6 பங்கு, தாம்பர பஸ்மம் 4 பங்கு, பொரித்த வெங்காரம் 7 பங்கு, தாளகம் 9 பங்கு, சித்ரமூலப் பட்டை 9 பங்கு, திரிபலை 10 பங்கு, திரிகடு 12 பங்கு, பெருங்காயம் 1 பங்கு, வசம்பு 1 பங்கு இவைகளை விதிப்படி பொடித்துக் கூட்டி இஞ்சி, சித்ரமூலம், எலுமிச்சம் பழம், வெள்ளுள்ளி, புளியாரை, முருங்கைப்பட்டை, எருக்கன் வேர், கலப்பைக் கிழங்கு, சிறு செருப்படை, வேளை, வெற்றிலை, அழிஞ்சில் இவைகளின் சாறுகளாலும், கஷாயங்களாலும் வகைக்கு ஒரு ஜாமமரைத்துப் பின்பு பஞ்சலோக கஷாயத்தால் 1 நாளும் அரைத்து குன்றியளவு குளிகை செய்து

நிழலிலுலர்த்தி வைத்துக்கொள்க. இதனை இஞ்சிச் சாற்றில் கொள்ள அசாத்தியமான ஜ்வரம், தோஷம், ஸந்நிபாதம் யாவுந் தீரும். இம்மருந்திற்கு ஸ்நானம், சந்தன லேபம், தயிர் அன்னம், தாம்பூலம், திராக்ஷை, கர்ஜூராதி பழவர்க்கம் ஹிதமா மென்க.

காலாக்நி ருத்ர ரஸம் (பஸவ ராஜீயம்)

சுத்தி செய்த ரஸம், கந்தகம், நாபி, ஓமம், திரிபலை, க்ஷாரத்வயம், சித்ரமூலப்பட்டை, இந்துப்பு, கறியுப்பு, ஜீரகம், விடங்கம், வெங்காரம், திரிகடு இப்பதினெட்டும் சமனாய்க் கூட்டிப் பொடித்துக் கொண்டு இவைகளின் மொத்த யெடை எட்டிக்கொட்டைச் சூர்ணம் கூட்டி பழச்சாற்றால் 1 நாள் அரைத்து மிளகளவு மாத்திரை செய்து உபயோகிக்க அக்நி மந்தம், குன்மம், கிரஹணி, வாதரோகம் தீரும். இது பெரும்பாலும் அக்நி துண்டவடியை ஒத்திருக்கிறது.

மஹா சீதாம்சு ரஸம் (ஆ. மு.)

கவிராஜ சேகரம், மாத்திரை வர்க்கம் முதல் பக்கத்தில் கூறியுள்ள சீதாம்சு ரஸத்துடன் உயர்ந்த ஸல்பெட் ஆப் குயினைன் கால் பலம் கூட்டி வேப்பம்பட்டைக் கஷாயத்தாலாவது, பழச்சாற்றாலாவது அரைத்து மாத்திரை செய்துக் கொள்வதே மஹா சீதாம்ஸ ரஸமென கவர்ண்மெண்ட் இன்டியன் ஸ்கூல் ஆப் மெடிஸின் ஆஸ்பத்திரியில் வழங்குகின்றனர். ஆந்திரா பார்மஸியில் இதனை காம்பௌண்ட் சீதாம்சு பில்ஸ் என்பர்.

ஜ்வராங்குச ரஸம் (பஸவ ராஜீயம்)

சுத்தி செய்த ரஸம், கெந்தகம், நாபி வகைக்குப் பலம் $\frac{1}{4}$, ஊமத்தன் விரை பலம் $\frac{3}{4}$, திரிகடு பலம் $1\frac{1}{2}$ இவைகளை

வரிசைக் கிரமமாய் கூட்டிப் பொடித்துப் பழச்சாற்ருல் 1 நாளும், இஞ்சி சாற்ருல் 1 நாளும் அரைத்துக் குன்றிபோல் உருட்டி நிழலிலுலர்த்தித் தேன், சீனி, பற்பல சுரஸ கஷாயங்களில் அனுபானித்துக் கொடுக்க வாத ஜ்வரத்தையும், ஏகாஹிக, த்வாஹிக, த்ரியாஹிக, சாதுர்த்திகாதி விஷம ஜ்வரங்களையும் நன்கு கண்டிக்கும்.

மஹா ஜ்வராங்குச ரஸம் (பஸவ ராஜீயம்)

சுத்தி செய்த பாத ரஸம், கந்தகம், லிங்கம், தாளகம், கபரி, மனேசிலை, வெங்காரப்பொரி, காவிக்கல், தாம்பர, அய, வங்க, ஸ்வர்ணமாக்ஷிக, அப்பரக பஸ்மங்கள், நேர்வாளப் பருப்பு இப்பதினென்கையும் சமமாய் நிறுத்து கிரமப்படி கல்வத்திலிட்டுப் பொடித்து பழச்சாறு, துளசிச்சாறு, சித்ரமூலக் கஷாயம், கடுக்காய் கஷாயம், புளியிலைச்சாறு இவைகளால் ஒவ்வொன்றிலும் மும்மூன்று நாளரைத்துக் கடலைப் பிரமாணம் மாத்திரை செய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொள்ளவும். இதனை வியாதிகளுக்கேற்ற வனுபானங்களில் கொடுக்க ஜ்வரம், தோஷம், ஸந்நிபாதம் முதலியவைகளை நன்கு கண்டிக்கும். இதனைவிட ஜ்வரத்தைக் கண்டிக்கக் கூடிய மருந்து வேறு கிடையாது.

மஹா கனக சுந்தர ரஸம் (வைத்திய சிந்தாமணி)

ரஸம், கெந்தகம், கருவங்கம், சுருள் துத்தம், ஸ்வர்ண மாக்ஷிகம், அப்ரகம், காந்தம், பவழம், முத்து, வங்கம், தாளகம் இவைகளின் நீற்றினங்கள் வகைக்குப் பலம் கால், தங்க பஸ்மம் பலம் மூன்று இவைகளைக் கல்வத்திலிட்டு சிறு செருப்படைச் சாற்ருல் மூன்று நாள் நன்ருய் அரைத்து மாத்திரைகளாகத் திரட்டியுலர்த்தி, காசிக் குப்பியிலிட்டு

மூடி ஏழு சீலமண் செய்துலர்த்தி வாலுகையிலிட்டு மூடி முத்தீயாய் மூன்று நாள் எரித்து நன்கு ஆறியபின் எடுத்து முற்கூறிய சாற்றால் பாவனைகள் செய்து அரைத்து எடுத்து வைத்துக்கொள்க. இதனை குளிகையாகவும் உருட்டிக் கொள்ளலாம். வியாதிகளுக் கேற்ற பல வனுபானங்களில், கால், அரை குன்றியளவு உபயோகிக்கின் க்ஷயம், பாண்டு, காஸம், சுவாஸம், காமாலை, கிரஹணி, கிருமி, வீக்கம், உதரம், வயிற்றுப்பஸம், குன்மம், மேகம், மூலம், அக்நிமந்தம், வாந்தி, அருசி, ஆமவாதம், ஹலீமகம், பற்பல ஜ்வரங்கள், சன்னிபாதங்கள், பித்தம், அபஸ்மாரம், வாதம், ரக்தபித்தம், பிரமேஹம், பெரும்பாடு, கபம், வஸ்திரோகம் முதலியவைகளைக் கண்டிக்கும். பலம், புஷ்டி, வீர்யம், காந்தி, ஆயுள் இவைகளை விருத்தி செய்யும்.

ஸ்வர்ண க்ரவ்யாத ரஸம் (வைத்திய சிந்தாமணி)

காந்தம், தங்கம், தாம்பரம், எஃகு, வெள்ளி, சங்கு இவைகளின் பஸ்மங்கள் வகைக்கு ஒரு தோலா ஒன்றாய்க் கலந்து இருப்புப் பாத்திரத்திலிட்டு துருஞ்சிப் பழச்சாற்றால் அரைத்து அத்துடன் சுத்தி செய்த ரஸம் பலம் ஒன்று, சுத்தி செய்த கந்தகம் பலம் இரண்டு இவைகளை கஜ்ஜலி செய்துக் கூட்டியரைத்து அடுப்பிலிட்டு சிறுதீயா யெரித்து உறவாக்கிய பின் கொருக்காய்ப்புளி, ஆம்லவர்கம், பஞ்சகோல கஷாயம் இவைகளில் ஐம்பது, ஐம்பது தடவை பாவனை செய்து பொரித்த வெங்காரம் 5 பலம், பஞ்ச லவணம் $2\frac{1}{2}$ பலம், மிளகு சூர்ணம் $12\frac{1}{2}$ பலம் கூட்டி, கடலைப் புளிப்பினால் 21 தடவை பாவனை செய்து அரைத்து எடுத்து வைத்துக் கொள்ளவும். இம்மருந்தினை இரண்டு, மூன்று குன்றியெடை புளித்த மோர், இந்துப்பு சகிதம் உட்கொள்ள எத்தகைய

குருவான ஆகாரத்தினையும் எளிதில் ஜீரணிக்கச் செய்து உடனே நல்ல பசியை உண்டுபண்ணும். அஜீர்ண சம்மந்த மான வயிற்றுவலி, மார்வலி போன்ற வியாதிகளை நன்கு கண்டிக்கும்.

மஹா கெந்தக ரஸ பற்படி (பை. ர.)

சுத்தி செய்த ரஸம், கெந்தகம் வகைக்குப் பலம் $\frac{1}{4}$ கல் வத்திலிட்டுப் பொடித்துச சுத்தமான இரும்பு வாணையிலிட்டு மிருதுவாக வெரித்து உருகினபின் தணலினின்று இறக்கி ஆறவைத்துப் பின்பு கல்வத்திலிட்டு அத்துடன் ஜாதிக்காய், ஜாதிபத்திரி, லவங்கம், வேப்பங்கொழுந்து வகைக்குப் பலம் $\frac{1}{4}$ கூட்டி சுத்த ஜலத்தால் மயனம்போ லரைத்து முத்துச் சிப் பியிலடைத்து மூடிச் சீலைமண் செய்து லகுபுடமிட்டெடுத்துப் பொடித்து வைத்துக் கொள்ளவும். இதனை அரைத்து மாத்திரையாகவுந் திரட்டிக் கொள்ளலாம். ஸ்திரீகளுக்கும், சிறுவர்களுக்கும் மிகவும் ஹிதமானது. கிரஹணி, அதி ஸாரம், பிரவாஹிகை, காசம், சுவாசம், ஜ்வரம், சூதகக் கோளாறு முதலியவைகளை நீக்கும். தீபன பாசனத்தை விர்த்தி செய்யும். பலம், புஷ்டி, வீர்யமதிகரிக்கும். இதனை குமார கல்பமென ரஸேந்திர சிந்தாமணி கூறும்.

சதுர்முக ரஸம் (பை. ர.)

சுத்தி செய்த ரஸம், கெந்தகம், லோஹம், அப்பிரகம் இந்நான்கும் வகைக்குத் தோலா 1, தங்கம் தோலா 2 இவை களைக் கல்வத்திலிட்டுக் குமரிச் சாற்றால் 12 ஜாமமரைத்து அடைதட்டி ஆமணக்கு இலையில் வைத்து மூடி தான்ய ராசி யில் 3 நாள் புடம்வைத்து எடுத்துப் பொடித்து வைத்துக் கொள்ளவும். இதில் 2 ரக்தி பிரமாணம் திரிபலா கஷாயம்,

தேன் இவைகளி லுட்கொண்டு வர க்ஷயம், பாண்டு, பிரமேகம், காஸம், சூலே, மந்தாக்னி, விக்கல், ஆம்ல பித்தம், விரணம், ஆட்யவாதம், விஸர்ப்பம், வித்ரதி, அபஸ்மாரம், உன் மாதம், மூலம், த்வக்தோஷம் முதலிய நோய்கள் நீங்கும். மலட்டைப் போக்கி சந்தான முண்டாக்கும். பலம், புஷ்டி, வீர்யம், ஆயுள் அதிகரிக்கும்.

வாத கஜாங்குச ரஸம் (பஸவ ராஜீயம்)

சுத்தி செய்த ரஸம், கெந்தகம், எட்டிக்கொட்டை வகைக்குத் தோலா 8, திரிகடு, திரிபலே வகைக்குத் தோலா 3 இவைகளைக் கிரமப்படி பொடித்துக் கூட்டிப் பழச்சாற்ருல் 4 ஜாமம் நன்ருயாட்டிக் குன்றியளவு குளிகை கட்டி நிழலிலுலர்த்தித் தக்க அனுபானங்களில் 1, 2 உட்கொண்டு வர ஊருஸ்தம்பம் முதலான பற்பல வாத ரோகங்களையும் கண்டிக்கும்.

வாத வித்வம்ஸனி ரஸம் (பஸவ ராஜீயம்)

சுத்தி ரஸம், கெந்தகம், காரீய, வங்க, லோஹ, தாம்பிர, அப்பிரக சிந்தூரங்கள், வெங்காரம், திரிகடு இப்பதினென்றும் வகைக்குத் தோலா 1, நாபி தோலா 2 முறைப்படி கல்வத்திலிட்டுப் பொடித்துத் திரிகடு, திரிபலே, சித்திரமூலம், கரிசாலே, கோஷ்டம், நொச்சி, இஞ்சி, ஆடாதோடை, கஞ்சா, எலுமிச்சம்பழம் இவைகளின் ஸ்வரஸ கஷாயங்களால் தனித்தனியாய் மும்மூன்றுதினம் பாவனைசெய்து அரைத்துக் குன்றிப் பிரமாணம் குளிகை செய்து கொள்ளவும். இக்குளிகையால் வாயு, சூலம், கப ரோகம், கிரஹணி, ஸன்னிபாதம், அபஸ்மாரம், சீதம், பித்தம், ப்லீஹோதரம், குஷ்டம் முதலியவை தீரும்.

ஸிந்தூர பூஷண ரஸம் (ரஸயோக ரத்னகரம்)

அபின், தங்கபஸ்மம், பச்சைக்கர்ப்பூரம் வகைக்கு 6 மாஷப்பிரமாணம், குங்குமப்பூ, ரஸ ஸிந்தூரம் வகைக்கு 2 தோலா, ஏலக்காய், மூங்கிலுப்பு வகைக்கு 1 தோலா இவை களைத் தனித்தனிப் பொடித்துக் கல்வத்திலிட்டுக் கோரைக் கிழங்கு கஷாயத்தால் 4 ஜாமமரைத்துக் குன்றிப் பிரமாணம் குளிகை செய்து நிழலிலுலர்த்தி யுபயோகிக்க அதிஸாரம், கிரஹணி, ஜ்வராதிஸாரம் முதலியவைகளையும் அவைகளின் பற்பல உபத்திரவங்களையும், கண்டிக்கும்.

பிரதாப லங்கேச்வர ரஸம் (வைத்திய விநோதம்)

ரஸம், கெந்தகம், நாபி, அப்பிரக ஸிந்தூரம் வகைக்கு ¼ தோலா, சித்திர மூலப்பட்டை சூர்ணம், ¾ தோலா, அய ஸிந்தூரம் 1 தோலா, சங்க பஸ்மம் 2 தோலா, காட்டு எரு வின் சாம்பல் 4 தோலா இவைகளை ஒன்றாய்க் கூட்டி கரி சாலைச் சாற்றால் நன்றாயாட்டிக் குன்றியளவுக் குளிகை கட்டி இஞ்சிச்சாறு, தேன் முதலிய வனுபானங்களில் கொடுக்க ஸன்னிபாத ஜ்வரம், வாத ரோகம், கப ரோகம், பிரஸவ ரோகம் முதலிய பிணிகள் தீரும்.

மாலினீ வஸந்தம் (பஸவ ராஜீயம்)

சுத்தி செய்த கபரி 2 பாகம், மிளகு 1 பாகம் கல்வத்தி லிட்டுப் பொடித்துப் பசு வெண்ணெய் கூடப்போட்டு நன்றாய் அரைத்துப் பின் பழச்சார் விட்டு வெண்ணெய்ப் பசை போகும் வரையில் அரைத்துக் குன்றிபோ லுருட்டி யுலர்த்தி வைத்துக்கொண்டு திப்பிலிப் பொடி, தேனிலனுபானித்து தேகத்திற்கு தக்கவாறு 1, 2 வீதம் உட்கொள்ள புராண ஜ்வரம், தாதுகத ஜ்வரம், விஷம ஜ்வரம், க்ஷய ஜ்வரம், பிரதரம்,

மூலம், நேத்திர ரோகம், ரக்த பித்தம், பித்த ரோகம் முதலான பற்பல கோரமான பிணிகள் தீரும். பத்தியம் பால் சாதம்.

ஸிம்ஹ ப்ரதி பாலன ரஸம் (பஸவ ராஜீயம்)

சுத்தி செய்த ரஸம், கெந்தகம், நாபி, நாகப்பாம்பு விஷம் இவைகளைச் சமமாகக் கூட்டிச் சிறு செருப்படைச் சாற்றால் 4 ஜாமமரைத்துப் பாசிப்பயிரளவு மாத்திரை செய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு 1, 2, 3 வீதம் மூலைப் பாலில் ஒரு வேளை கொடுக்க அசாத்தியமான ஸந்நிபாதம் தீரும். பிரக்ஞா பங்கத்தை நீக்கி ஸ்மரணையை யுண்டாக்கும்.

தருணார்க்க ரஸம் (பஸவ ராஜீயம்)

அப்ரகம், தாம்பரம், வெள்ளி, கருவங்கம், ஹேமமாக்ஷிகம், எஃகு, முத்து, பவழம் இவைகளின் நீற்றினங்கள், வெங்காரம், கெந்தகம், மனோசிலை, சர்ப்ப விஷம், கஸ்தூரி, மூங்கிலுப்பு, கருமத்தன் விரை, செஞ்சந்தனம் இப்பதினாறும் சமனெடை இவைகளுக்குச் சமன் நாபி, முறைப்படி கூட்டி மால தீபல ரஸத்தால் அரைத்தரைத்து பாவனை செய்து குன்றிப் பிரமாணம் குளிகை கட்டி யுலர்த்தி வைத்துக் கொள்ளவும். தக்கவனுபானங்களில் 1, 2 வீதம் கொடுக்க ஸமஸ்த ஸந்நிபாத ஜ்வரங்களையும் நிவர்த்திக்கும். ஸ்திரீகளின் ரஜோ தோஷங்களையும், ஸூதகஜன்னியையும், பால ரோகங்களையும் நன்கு கண்டிக்கும்.

ஸ்வர்ண க்ரவ்யாத ரஸம் (ரஸயோக ரத்நாகரம்)

சுத்தி செய்த கெந்தகம் பலம் 2, பொடித்து லோஹ பாத்திரத்திலிட்டுருக்கி அதில் பால ரஸம் பலம் 1 சேர்த்து மிருதுவாக வெரித்துக் கஜ்ஜலி செய்து அத்துடன் காந்தம்,

ஸ்வர்ணம், தாம்பரம், எஃகு, வெள்ளி, சங்கு இவைகளின் பஸ்ம ஸிந்தூரங்கள் வகைக்குத் தோலா 1, துருஞ்சிமாத ளைச் சாற்றாலரைத்துக் குழப்பிச் சேர்த்து மந்தாக்கினியா யெரித்து ஆம்லவேதஸம், ஆம்லவர்க்கம், பஞ்சகோல கஷாயம் இவைகளால் முறைப்படி 50 தடவை தனித்தனியாய்ப் பாவனைகள் செய்த பின்பு, பொரித்த வெங்காரம் பலம் 5, பஞ்ச லவணம் பலம் 2½, மிளகு பலம் 12½ பொடித்துக் கூட்டி, கடலைப் புளிப்பினால் 21 தடவை பாவனை செய்து, அரைத்து மெழுகு பதத்தில் வழித்துக் காசிக் குப்பியி லடைத்து வைத்துக்கொள்ளவும். உளுந்தளவு தக்க வனு பானங்களில் கொடுக்க எத்தகைய குருத்துவ ஆகாரங்களையும் எளிதில் ஜீர்ணிக்கும். மற்றுமுள்ள இதன் குணங்களை க்ரவ்யாத ரஸத்தில் காண்க.

லகு சூர்யாவர்த்தி ரஸம் (ஆ. மு.)

அப்ரக, ஹேமமாக்ஷிக, மௌத்திக பஸ்மங்கள், வெங்காரம், குடேசி ஸத்வம், லவங்கம், காகநாச பீஜம், கார்ப்பாஸாஸ்தி இவைகள் வகைக்குத் தோலா 1, லிங்கம் தோலா 3 இவைகளைப் பொடித்துக் கல்வத்திலிட்டு, எலுமிச்சம் பழச் சாறு, இஞ்சிச் சாறு, திராக்ஷை ரஸம் இவைகளால் வகைக்கு ஒரு நாளரைத்துக் குன்றியளவு குளிகை செய்து, நிழலி லுலர்த்தி வைத்துக் கொள்ளவும். இஞ்சிச் சாறு, தேன் முதலியவைகளில் உபயோகிக்கலாம். முத்துக்குப் பதில் முத்துச்சிப்பி சேர்ப்பதுண்டு.

லகு ஸந்நிபாத பைரவ ரஸம் (வைத்திய சிந்தாமணி)

சுத்தி செய்த ரஸம், நாபி, அப்ரக ஸிந்தூரம், கந்தகம், தாமிர பஸ்மம், வெங்காரம் இவ்வாறையும் சமனெடையாய்க் கல்வத்திலிட்டு ஆலம்பாலால் 4 ஜாமம் அரைத்துருட்டி

டோளாந்திரமாய்க் கட்டி, மேற்படி பாலில் தொங்கவிட்டு 4 ஜாமம் யெரித்துப் பின்பு மீன், எருமை, மயில் இவைகளின் பித்து நீரால் வகைக்கோர் நாளாட்டி, 2 உளுந்தளவு குளிகை செய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு, திப்பிலி கஷாயத்தில் 1, 2 குளிகையைக் கொடுக்க ரக்தவ்ஷடீவி முதலான ஸந்நிபாத ஜ்வரங்கள் பதின்மூன்றுந் தீரும்.

மஹா ஸந்நிபாத பைரவ ரஸம் (வைத்திய சிந்தாமணி)

ரஸம், தாம்பரம், அயம், அப்ரகம், காந்தம் இவைகளின் நீற்றினங்களைச் சமன்கூட்டி சிறுசெருப்படைச் சாற்றால் நான்கு ஜாமம் அரைத்து, உலர்த்திக் காசிக் குப்பியிலிட்டு மூடிச் சீலைமண் செய்து வாலுகா யந்திரத்திலிட்டு ஒரு நாள் யெரித்து, ஆறினபின்பு பன்றிப் பித்தத்தினால் ஒரு நாள் அரைத்து குன்றிப் பிரமாணம் மாத்திரை செய்து, உலர்த்தி வைத்துக்கொண்டு உபயோகிக்க சன்னிபாத ஜ்வரங்கள் தீரும்.

ம்ருத்யுஞ்ஜெய ரஸம் (பஸவ ராஜீயம்)

தாம்பரம், அப்ரகம், தாளகம், ரஸம், கந்தகம், கடல் நுரை இவைகளின் நீற்றினங்களைச் சமனெடையாய்க் கல்வத்திலிட்டு, கலப்பைக் கிழங்கின் சாற்றால் 8 ஜாமம் அரைத்து வில்லை தட்டி யுலர்த்தி, ஓட்டிலிட்டு மூடிச் சீலைமண் செய்து உலர்த்தி கெஜபுடமிட்டு நன்றாய் ஆறியபின் னெடுத்து மயில், வெள்ளாடு, பாம்பு, மீன் இவைகளின் பித்து ஜலத்தால் நவ்வாலு ஜாமம் பாவனை செய்தரைத்து, வல்லப்பிரமாணம் மாத்திரை திரட்டி, தக்க வனுபானங்களி லுபயோகிக்க ஸந்நிபாத ஜ்வரங்கள் பதின்மூன்றுந் தீரும். ஸந்நிபாதத்தா லேற்படுகின்ற மிருத்யு பயத்தைப் போக்குவதால் இஃது ம்ருத்யுஞ்ஜெய ரஸமெனப் பெயர்பெற்றது.

ரஜத சந்திரோதய ரஸம் (ஆ. மு.)

பூர்ண சந்திரோதயத்திற்குப் பதில் ரஜத சந்திரோதயம் கூட்டி, அம்மாத்திரையைப் போன்றிதனை தயாரித்துக்கொள்க. பூர்ண சந்திரோதய ரஸத்தின் குணங்களிதற்குமுண்டு.

ஹுதாசன ரஸம் (ஆ. மு.)

கந்தகம் தோலா 2, ரஸம் தோலா 1, நாபி, திரிகடு, திரிபலை இவ்வேழும் வகைக்குத் தோலா 1 இவைகளுள் ரஸ கந்தகத்தை கஜ்ஜலி செய்து, மற்றவைகளைப் பொடித்துக் கூட்டி, கரிசாலைச் சாற்றால் 4 ஜாமம் நன்றாயரைத்து, குன்றியெடை குளிகைக்கட்டி 1, 2 வீதம் இஞ்சிச் சாற்றில் கொடுக்க சூலை, குன்மம், அஜீர்ணம் முதலிய பிணிகளைப் போக்கித் தீபன பாசனத்தை அதிகரிக்கும்.

ஸ்வச்சந்த பைரவ ரஸம் (ர. யோ. ர.)

தாம்பர பஸ்மத்தையும், கருநாபியையும் சமனாய்க்கூட்டி ஊமத்தையிலைச் சாற்றால் 4 ஜாமமாட்டி, பயிரளவு மாத்திரை செய்து, இஞ்சிச்சாறு, இந்துப்பு, சீனி முதலியவைகளிற் கொடுக்க ஸந்நிபாத ஜ்வரங்கள் தீரும்.

(வேறு) இச்சாபேதி ரஸம் (ஆ. மு.)

லிங்கம் 1, கழற்சிப் பருப்பு 2, வெங்காரம் 4, வாளம் 6, கடுக்காய்த்தோல் 8 பங்குகளாகக் கூட்டிப் பழச்சாற்றாலாட்டி குன்றியளவு குளிகைக்கட்டி 1, 2 சீனி, வெந்நீர் முதலியவைகளில் கொடுக்க நன்கு பேதியாகும்.

ரேசன வடி (ஆ. மு.)

கவிராஜசேகரம் மாத்திரை வர்க்கம் 13-ம் பக்கத்திற் கூறிய இச்சாபேதி ரஸத்தின் சரக்குகளை எடைப்பிரகாரம்

கூட்டிப் பொடித்துப் பழச்சாற்று லரைத்துப் பாவனை செய்துலர்த்திய சூர்ணம் 1 பங்கு, ரேவல் சீனிச் சூர்ணம் 2 பங்கு கூட்டி, தும்மட்டிக்காய்ச் சாற்றுலரைத்துப் பாவனைசெய்து குன்றியளவு குளிகைசெய்து 1, 2 அனுபானங்களில் கொடுக்க நன்கு விரேசனமாகித் திரிதோஷங்களையுஞ் சமனஞ்செய்யும். அண்ட வாதம், நெறி ஜ்வரம் இவைகளிலுபயோகிக்க விசேஷ குணம் தரும்.

நித்யோதித ரஸம் (ரஸ மஞ்ஜரீ)

ரஸ, தாம்பர, அய, அப்பரக பஸ்மங்கள் அல்லது ஸிந்தூரங்கள், நாபி, கந்தகம் இவ்வாறும் சமன், சேராங்கொட்டை இவைகளெல்லாவற்றிற்கும் சமன் கல்வத்திலிட்டுப்பொடித்து, கருணைக்கிழங்கின் சாற்றுல் 3 நாள் நன்றுயரைத்துக் குன்றியளவுருட்டி, நிழலில் உலர்த்தி வைத்துக்கொள்ளவும். இதில் 1, 2 வீதம் நெய்யிலுட்கொண்டு வர மூலரோகந் தீரும்.

ஸிம்ஹாஸ்யாதி வடி (பைஷஜ்ய ரத்நாவளி)

ஆடாதோடைச் சாற்றைச் சுண்டவைத்த சத்து 1 பலம், எருக்கின் வேர்ப்பட்டைச் சூர்ணம் $\frac{1}{4}$ பலம், அபின் $\frac{1}{4}$ பலம், பச்சைக்கர்ப்பூரம் $\frac{1}{8}$ பலம் இவைகளைக் கல்வத்திலிட்டு ஆடாதோடைச் சாற்றுல் 4 ஜாமமரைத்து இருகுன்றிப் பிரமாணம் உருட்டித் தேனிலுட்கொள்ள சுவாசம், காசம், உரக்ஷதம், ரக்த பித்தம், கிரஹணி, ரக்தாதி ஸாரம், வீக்கம் தீரும்.

ஸ்லீபதாரி லோஹம் (பைஷஜ்ய ரத்நாவளி)

திரிபலை, காந்த ஸிந்தூரம், சிலாஜது பஸ்மம் இவ்வைந்தினையும் சமனுய்க் கூட்டித் திரிபலை கஷாயத்தால் பாவனை

செய்து நன்றாயரைத்து குன்றியளவுருட்டி யுலர்த்தி வைத்துக்கொண்டு 1, 2 வீதம் திரிபலை சூர்ணத்துடன் உட்கொண்டு வர ஸ்லீபத ரோகமும் அதனாலுண்டாகும் ஜ்வரம், வீக்கம், நெறி முதலியவைகளுந் தீரும்.

அக்நிகுமார வடி (பாவ ப்ரகாசம்)

ரஸம், கந்தகம், வெங்காரப்பொரீ, பலகரை பஸ்மம், யவாக்ஷாரம், அரிசித்திப்பிலி, சுக்கு இவைகள் வகை ஒன்றுக்குப் பலம் $\frac{1}{4}$, நாபி பலம் $\frac{3}{4}$, மிளகு பலம் 2 இவைகளை தனித்தனியாய் சுத்தி செய்து, பொடித்துச் சேர்த்து எலுமிச்சம் பழச்சாற்றால் 8 ஜாமமரைத்து மிளகளவு மாத்திரை செய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொள்க. இதில் 1, 2 வீதம் தேன் முதலிய தக்கவனுபானங்களில் 5, 6 வேளையுபயோகிக்க அக்நிமந்தம், வயிற்றுவலி, அஜீர்ணபேதி, விஷூசி, ஜ்வரம் முதலியவைகள் தீரும். இஃது பலமுறை செய்தனுபவித்த ஓர் சிறந்த ஔஷதம்.

அர்த்தநாரீஸ்வர ரஸம் (பைஷஜ்ய ரத்நாவளி)

சுத்தி செய்த நாபி 3 பங்கு, பலகரை பஸ்மம் 5 பங்கு, வெங்கார பஸ்மம் 5 பங்கு, மிளகு 9 பங்கு பொடித்துக் கல்வத்திலிட்டு முலைப்பாலால் 4 ஜாமம் நன்றாயரைத்து வைத்துக்கொள்ளவும். அனுபான பேதங்களால் ஜ்வரம், சூலை, மலக்கட்டு, வாத ரோகம், சிரோ ரோகம், சிலேஷ்ம விகாரம் தீரும். இடது புரத்து முலைப்பாலில் கொடுக்க இடது புரத்து ஜ்வரமும், வலது புரத்து முலைப்பாலில் கொடுக்க வலது புரத்து ஜ்வரமும், இருமுலைப்பாலில் பிரயோகிக்க சர்வாங்க ஜ்வரமும் தீருமென்க. சிரோ ரோகங்களில் இதனை நசியம் செய்வதுமுண்டு.

சிலாஜது வடி

சுத்தி கோமூத்ர சிலாஜது, மஞ்சள் பொடி, நெல்லி முள்ளிச் சூர்ணம் வகைக்குப் பலம் ஒன்று, பூர்ண சந்திரோ தயம் விராகனெடை ஒன்று இவைகளைக்கூட்டி அஸனாதிகண கஷாயத்தினல் நன்ருயரைத்து குன்றிப்பிரமாணம் குளிகை கட்டி ஒன்றிரண்டு உபயோகிக்க ப்ரமேஹம், வெட்டை தீரும். தேஹ வெப்பம் தணிந்து பலங்கொள்ளும்.

நித்ரோதய வடி (ரஸ தரங்கிணி)

அபின் 6 மாஷம், மூங்கிலுப்பு 6 மாஷம், ரஸ ஸிந்தூரம் 6 மாஷம், நெல்லிமுள்ளிச் சூர்ணம் 1 தோலா, கெஞ்சா கஷாயத்தால் 3 தடவை பாவனை செய்து நன்ருயரைத்து குன்றியளவு குளிகை செய்துக்கொள்ளவும். 1, 2 குளிகை சுத்த ஜலம், பால் இவைகளுடன் உட்கொள்ள நல்ல நித்திரையுண்டாகும். வியாதிகளின் உபத்திரவங்கள் தோற்ருது. பற்பல நோய்களையும் நன்கு கண்டிக்கும்.

வேதநாந்தக வடி (ரஸ தரங்கிணி)

அபின் 3 மாஷம், பச்சைக் கர்ப்பூரம் 3 மாஷம், குரோசாணி ஓமம் 3 மாஷம், ரஸ ஸிந்தூரம் 6 மாஷம் இவைகளைப் பொடித்துக் கல்வத்திலிட்டு கெஞ்சாச்சாறு அல்லது க்ஷாயத்தினல் பாவனை செய்தரைத்து, குன்றிப் பிரமாணம் குளிகை செய்து நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு 1, 2 வீதம் உட்கொண்டு சுத்த ஜலம் சாப்பிட சிரசு, கண், காது, தந்தம், கை, கால், மார்பு, விலா, வயிறு, விரை, இடுப்பு முதலிய விடங்களின் வேதனைகளைக் கண்டித்து சுகமான தூக்கத்தையும் உண்டாக்கும்.

கர்ப்பூர சிலாஜது பஸ்மம் (ஆ. மு.)

சிலாஜதுவை கழுநீரில் 1 நாளூறவைத்து மறுநாள் வெந்நீர் விட்டலம்பச் சுத்தியாகும். சுத்தி செய்த சிலாஜதுவை குடுவையிலிட்டு அது முழுகக் குமரிச்சாறு விட்டு மேல கல் மூடிச் சீலைமண் செய்து 50, 60 எருவில் புடம்போட நீறும், இளநீர், பால், வெண்ணெய், சீனி முதலிய வனுபானங்களிலுபயோகிக்க சகல வெப்பத்தையுந் தணிக்கும். நீர்ப்பை யழலையை நீக்கும். வெள்ளை, பெரும்பாடு, சீதரக்தக் கடுப்பு இவைகளைக் கண்டிக்கும். 2, 3 குன்றியெடை கொடுக்கலாம்.

அப்ரக ஸிந்தூரம் (ர. ர. ச.)

கிருஷ்ணாப்ரகத்தை பழுக்கக் காய்ச்சி காடி, கோமூத்திரம், பால், திரிபலை கஷாயம் இவைகளில் ஏழுதடவை துவைக்க சுத்தியாகும். சுத்தித்த அப்ரகத்தைக் கல்லுரலிலிட்டு இடித்துப் பொடித்து, சுணை நெல்லுடன் கலந்து கம்பளியிலிட்டுத் தளர முடிந்து, காடியில் தொங்கவிட்டுப் பிசைந்து வர வெண்ணெய் போல் அப்ரகம் பாண்டத்தில் படியும். காடியையிறுத்து சுத்த ஜலத்தாலலம்பி ரவியில் உலர்த்திக்கொள்க. இதே தான்யாப்ரகம் அல்லது அப்ரக நவநீதம் எனப்படும். தான்யாப்ரகத்தை மஞ்சள், நெல்லிக்காய், முருங்கைப்பட்டை இம்மூன்று சாறுகளால் தனித்தனியா யரைத்தரைத்து ஒவ்வொன்றிலும் 20 புடங்களிட சிந்தூரமாகும்.

(வேறு) அப்ரக ஸிந்தூரம் (சார்ங்கதரம்)

தான்யாப்ரகத்தை எருக்கம் பாலால் நாலாறு ஜாமம் நன்றுயரைத்து, வில்லை தட்டி யுலர்த்தி, அகலில் எருக்கிலையைப் பரப்பி அதின்மேல் வில்லைகளை வைத்து மேலும் இலையைப் பரப்பி மூடிச் சீலைமண் செய்து கெஜபுட மிடவும்.

இவ்வாறு 7 புடங்களிட்டு, ஆலம்விழுது கஷாயத்தால் முன் போலரைத்தரைத்து 3 புடங்களிட ஸிந்தூரமாகும். தனுக் கறும் வரையிலிதனைப் புடமிடல் வேண்டும். இம்மருந்து ஓர் சிறந்த ரஸாயனம். இதனை கல்பமாகச் சேவிக்க பலம், புஷ்டி, வீர்யம், காந்தி, யௌவனம், தீர்க்காயுள் உண்டாகும். நரை திரை மாறும். தக்க வனுபானங்களி லுட்கொள்ள ப்ரமேகம், க்ஷயம், க்ஷயஜ்வரம், வெட்டை முதலிய வநேக அசாத்திய ரோகங்கள் தீரும்.

சூர்யா வர்த்த ரஸம் (பைஷஜ்ய ரத்நாவளி)

ரஸம் பலம் 1, கந்தகம் பலம் ½ கல்வத்திலிட்டுக் கஜ்ஜலி செய்து, குமரிச் சாற்றால் 4 ஜாமம் நன்றாயரைத்து, 1½ பலம் சுத்தி செய்த மெல்லிய தாம்பரத் தகடுகளுக்குப் பூசியுலர்த்தி, அகலிலிட்டு மூடிச் சீலைமண் செய்து, வாலுகா யந்திரத்தில் வைத்து 3 நாள் எரித்து, ஆறிய பின்பெடுக்க தாம்பரம் ஸிந் தூரித்திருக்கும். 1, 2 குன்றி அனுபானங்களில் கொள்ள ஸ்வாஸகாச ரோகந் தீரும்.

வாதாக்னி குமார ரஸம் (ஆ. மு.)

ரஸம் 4 பலம், கந்தகம் 4 பலம், தாளகம் 1 பலம் இவை களைக் கல்வத்திலிட்டுப் பொடித்து, வெற்றிலைச் சாற்றாலும், மாதளம்பழச் சாற்றாலும் வகைக்கு 12 ஜாமமரைத்துலர்த்திக் குப்பியிலடைத்துச் சீலைமண் செய்து, வாலுகா யந்திரத்தி லிட்டு 12 ஜாமம் நன்றா யெரித்து ஸாங்க சீதளமானபின் பெடுத்துப் பொடித்து வைத்துக்கொள்க. தக்க வனுபானங் களில் கொடுக்க 80 வகையான வாத ரோகங்களையும், சமஸ்த ஜ்வரங்களையும், கபங்களையும் கண்டிக்கும். தாளகத்தி னெடையை இரண்டு பலமாகக் கூட்டிச் செய்வாருமுளர்.

ஹிங்குளோத்த ரஸ ஸிந்தூரம் (ஆ. மு.)

சுத்தி செய்த லிங்கத்தையும், கந்தகத்தையும் சமன் கூட்டிப் பொடித்து, காசிக் குப்பியிலிட்டு மூடிச் சீலைமண் செய்துலர்த்தி, வாலுகா யந்திரத்திலிட்டு முத்தீயாய் மூன்று நாளெரித்து, ஆறிய பின்னெடுத்துப் பொடித்து வைத்துக் கொள்க. 1, 2 குன்றி தேன் முதலிய வனுபானங்களில் கொடுக்கலாம். வாத ரோகம், பித்த ரோகம், கப ரோகம், மேக ரோகம், குன்ம ரோகம், ரண ரோகம், ஜ்வர ரோகம், கிரஹணி ரோகம் முதலியவெல்லா நோய்களையுங் கண்டிக்கும்.

ஏக குண ஸிந்தூரம் (பாவ ப்ரகாசம்)

பால ரஸம் பலம் 1, சுத்த கந்தகம் பலம் 1 கூட்டிக் கஜ்ஜலி செய்து குமரிச்சாற்றால் 4 ஜாமம் அரைத்து ரவியி லுலர்த்திக் காசிக் குப்பியில் பாதியளவிட்டு, பலபக்கல்லால் மூடிச் சீலைமண் செய்து, மணலிலிட்டு முத்தீயாய் 12 ஜாமம் எரிக்க ஸிந்தூரமாகும்.

ஷட்குண ஸிந்தூரம் (ர. யோ. ர.)

சுத்த ரஸத்திற்கு ஆறு பங்கு கந்தகத்தைக் கூட்டி கஜ்ஜலி செய்து, குமரிச் சாற்றாலரைத்துக் குப்பியிலிட்டு, முறைப்படி வாலுகையில் 3 தினமெரிக்க ஸிந்தூரமாகும். சர்வ ரோகங்களையுங் கண்டிக்கக் கூடியதாயும், தோஷமற்றதாயுமுள்ள ஓர் சிறந்த ரஸாயன ஔஷதம்.

காஸீஸ ஸிந்தூரம் (ர. ப்ரதீபிகை)

அன்ன பேதியைப் பழச்சாற்றில் 1 நாள் ஊறவைத்து சுத்த ஜலத்தாலலம்பி யுலர்த்தச் சுத்தியாகும். இதனைப் பழச் சாற்றால் நன்கரைத்து, உலர்த்திப் புடமிட ஸிந்தூரமாகும்.

லோஹ ஸிந்தூரத்தின் குணங்கள் யாவுமிதற்குண்டு. இது பாலர்களுக்கோர் அமிர்தம் போன்றது.

ஸுரோராக்ஷார காஸீஸ ஸிந்தூரம் (ர. ப்ரதீபிகை)

அன்ன பேதிக்குச் சமனுப் வெடியுப்பைக் கூட்டி முன் போல் பழச்சாற்று லாட்டிப் புடமிடவும். இஃது நீரைப் பிரித்து வீக்கத்தை வடிக்கும். தீபன பாசனத்தை விர்த்தி செய்யும். சோவை, பாண்டு தீரும.

நவக்கிரஹ ஸிந்தூரம் (ஆ. மு.)

சுத்தி செய்த கௌரி, லிங்கம், ரஸம், கந்தகம், அரிதாரம், பிண்ட தாளகம், துத்தம், கபரி, கோமூத்ர சிலாஜது இவ்வொன்பதும் சமன் சேர்த்துக் கல்வத்திலிட்டுப் பொடித்து, வேப்பம் பட்டைக் கஷாயத்தால் 4 ஜாமமும், கரிசாலைச் சாற்றால் 4 ஜாமமும் அரைத்து, உலர்த்திக் காசி குப்பியிலடைத்து, மூடி ஏழு சீலமண் செய்து, வாலுகையிலிட்டு முறைப்படி 2 நாளெரித்து, ஸாங்க சீதளமான பின்பெடுத்துப் பொடித்து வைத்துக்கொண்டு, தேன் முதலிய தக்க வனுபானங்களில் கொடுக்க ஜ்வரம், ஸந்நி பாதம், கபம், வாதம், மேகம், சூலை, குஷ்டம் முதலான வநேக ரோகங்கள் தீரும்.

லோஹ பஸ்மம் (ரஸ. ர. ச.)

ஸன்னமாக ராவிய லோஹ வரப்பொடியைப் பழுக்கக் காய்ச்சி திரிபலை கஷாயததில் 7 முறை துவைக்க சுத்தியாகும். சுத்தி செய்த வரப்பொடியைக் கல்வத்திலிட்டுத் திரிபலை கஷாயத்தால் 4 ஜாமம் நன்றுயரைத்து வில்லைதட்டிக் காயவைத்து, அகலிலிட்டு மேலே கல்மூடிச் சீலமண் செய்துலர்த்தி, கன புடம் போடவும். இவ்வாறு 16 புடங்களிட ஸிந்தூரமாகும். இதனைத் தக்க வனுபானங்களிலுபயோகிக்க பாண்டு, சோபை,

காமாலை, மேகம், மூலம், குல்மம் தீரும். இரத்த சுத்தியும் இரத்த விருத்தியு முண்டாகும். பலம், புஷ்டி, வீர்யம் அதிகரிக்கும்.

(வேறு) அய ஸிந்தூரம் (சார்ங்கதரம்)

அரப்பொடி 12 தோலா, உலாந்தா லிங்கம் 1 தோலா கல்வத்திலிட்டுப் பொடித்து, கற்றாழைச் சாற்றால் 4 ஜாமம் அரைத்து வில்லை தட்டி யுலர்த்தி, ஓட்டிலிட்டு மூடிச் சீலைமண் செய்து முழுபுட மிடவும். இவ்வாறு 7 புடங்களிட உயர்தர ஸிந்தூரமாகும்.

காந்த ஸிந்தூரம் (ர. ர. ச.)

இதனை லோஹ ஸிந்தூரத்தைப் போலவே தயாரித்துக் கொள்க.

லோஹ ஸௌவீரம் (ஆ. மு.)

சுத்தி செய்த அயப்பொடியையும், வீரத்தையும் சமனெடைக் கூட்டி, உமிழ் நீரால்லரைத்து வில்லைதட்டி யுலர்த்தி, சட்டியிலிட்டு மேல் சட்டி மூடிச் சந்தி பந்தனஞ் செய்துலர்த்தி, அடுப்பிலேற்றி முத்தீயாய் 3 ஜாமம் எரிக்க ஸிந்தூரமாகும். அரிசி யெடை தேனில் கொடுக்க ஜ்வரம், ஸந்நிபாதம், கபம், மஹா வாத ரோகம் தீரும்.

தாம்பர பஸ்மம் (ர. ர. ச.)

தாம்பர ரேக்குகளைப் பழுக்கக் காய்ச்சி நல்லெண்ணெய், கோமூத்திரம், மோர், காடி, கொள்ளு கஷாயம் இவைகளில் தனித்தனியாய் ஏழு தடவைகள் தோய்க்கச் சுத்தியாகும். இந்துப்பைப் பழச்சாற்றி லரைத்து ரேக்குகளுக்குத் தடவி நெருப்பில் காய்ச்சிக் காடியிலாவது, நொச்சிச் சாற்றிலாவது 8 முறை தோய்க்கச் சுத்தியாகும். சுத்தி செய்த ரஸம் பலம் 1, கந்தகம் பலம் 1 கல்வத்திலிட்டு எலுமிச்சம் பழச்சாற்று

லரைத்து ஒரு பலம் தாம்பர ரேக்குகளுக்குத் தடவி யுலர்த்தி அகலிலிட்டு மூடிச் சீலேமண் செய்து 3 கெஜபுடங்களிட நீறும். வாந்தி, பிராந்தி முதலிய தோஷங்களுண்டாகா. ரஸம் பலம் 1, கந்தகம் பலம் 2 கல்வத்திலிட்டு புளியறணைச் சாற்றாலாட்டி ஒரு பலம் சுத்த தாம்பர ரேக்குகளில் தடவி, சட்டியிலிட்டு மூடிச் சீலேமண் செய்துலர்த்தி 4 ஜாமம் எரிக்க பஸ்மமாகும். பஸ்மத்தை பழச்சாற்று லரைத்து வில்லே தட்டி யுலர்த்தி காட்டுக்கருணைக் கிழங்கில்வைத்து சீலேமண்ணேழுஞ் செய்து கெஜபுடமிட களிம்பறும். இதனை வியாதிகளுக்கேற்ற வனுபானங்களி லுபயோகிக்க குஷ்டம், குன்மம், சூலே, உதரம், சுவாசம், காசம், க்ஷயம், வாத ரோகம் முதலான எல்லா நோய்களும் நீங்கும்.

ஸ்வர்ண பஸ்மம் (ர. ப்ரதீபிகை)

தங்க ரேக்கும், ரஸ பஸ்மமும் சமன்கூட்டி முள்ளிக் கீரைச் சாற்றால் 3 நாளரைத்து மெல்லிய வில்லே தட்டி யுலர்த்தி, அதற்கு சமனெடை கந்தகத்தைப் பொடித்து கீழ் மேலிட்டு, ஓட்டில் வைத்து மூடிச் சீலேமண் செய்து 30 எருவில் புடமிட பஸ்மமாகும். ப்ரமேகம், க்ஷயம், விஷம் தீரும். பலம், புஷ்டி, காந்தி, வீர்யம், யௌவனம் உண்டாகும்.

ஸ்வர்ண மாக்ஷிக பஸ்மம் (ர. ர. ச.)

மாக்ஷிகத்தை நெருப்பிற் காய்ச்சி ஆமணக்கெண்ணெய், மாதுலங்கச்சாறு, வாழைக் கிழங்குச்சாறு, திரிபலே கஷாயம் இவைகளில் தோய்க்க சுத்தியாகும். சுத்தித்த தங்க நிமளேயை கொடி மாதளேச் சாற்றாலரைத்தரைத்து 5 வராஹ புடங்களிட நீறும். மாக்ஷிகத்துடன் கந்தகத்தையுங் கூட்டி யரைத்துப் புடமிடலாம். ஸ்வர்ண பஸ்மத்தின் குணங்கள் பெரும்பாலு மிதற்குமுண்டு.

ரஜத பஸ்மம் (வைத்திய சிந்தாமணி)

ஸ்வர்ணமாக்ஷிகம் பலம் ½, லிங்கம் பலம் ½ கல்வத்தி லிட்டுப் பொடித்து, ஒரு அகலில் பாதி பொடியைப் பரப்பி அதில் 1 பலம் வெள்ளியை மெல்லிய தகடாகத்தட்டி வைத்து மேலும் பொடியைத் தூவி, அழுத்தி மேல கல்மூடிச் சீலைமண் செய்துலர்த்தி முழுபுடம் போடவும். ஆறிய பின்பெடுத்து முன்போலரைத்துப் புடமிடவும். இவ்வாறு 14 புடங்களிட வெள்ளி நீறும். ப்ரமேகம், வெட்டை, ரக்த பித்தம், காசம், க்ஷயம் தீரும். ஹ்ருதயம், ச்வாஸாசயம் பலப்படும். பலம், புஷ்டி, வீர்யம் அதிகரிக்கும். நேத்திர ரோகிகள் வெள்ளி பஸ்மத்தினை திரிபலையி லுட்கொண்டுவரின் நேத்திர ரோகங் கள் சீக்கிரம் குணமாகும்.

(வேறு) ரஜத பஸ்மம் (வைத்திய சிந்தாமணி)

ஒரு பங்கு தாளகத்தை ஆம்லவர்க்க ரஸத்தாலரைத்து மூன்றுபங்கு வெள்ளித் தகட்டினிற் பூசி மூசையிலிட்டு மண் சீலை செய்து 30 எருவில் புடம்போடவும். இவ்வாறே 14 புடங்கள் போட வெள்ளி பஸ்மமாகும்.

ரஜத சந்திரோதயம் (ஆ. மு.)

ரஜத ரேக்கு அல்லது அரப்பொடி தோலா 1, பால ரஸம் தோலா 8, கந்தகம் தோலா 16 கூட்டி, பூர்ண சந்திரோதயத் தைப் போல் தயாரித்துக் கொள்க.

ஜஸத பஸ்மம் (ஆ. மு.)

சுத்த நாகத்தை யுருக்கி நொச்சிச்சாற்றில் ஏழு தடவை சாய்க்கச் சுத்தியாகும். இதனை இரும்புக் கறண்டியிலிட்டு, உலக்கடத்தி லுருக்கி அதற்கு நாலிலொரு பாகம் அபி னியைக் கொஞ்சம் கொஞ்சமாய்க் கிராஸம் கொடுத்து இரும்பு

கம்பியால் கிளறிக்கொடுக்க நாகம் பூர்த்துப் பஸ்மமாகும். இதனை வஸ்திரகாயஞ் செய்து முறைப்படி யுபயோகிக்கின் மூலம், வெட்டை, ப்ரதரம், ப்ரமேகம், கிரஹணி, அதிஸாரம், காசம், நேத்திர ரோகம் தீரும். எலுமிச்சங் கழியால் கிளறிக் கொடுத்தல் நலமென்று வேறு நூல்கள் கூறும்.

வங்க பஸ்மம் (ஆ. மு.)

நொச்சிச் சாற்றில் மஞ்சளைப் பொடித்துப் போட்டு, அதில் வெள்வங்கத்தை யுருக்கி 7 தடவை சாய்க்க வங்கம் சுத்தியாகும். சுத்த வங்கத்தை வாணலியி லிட்டுருக்கி, நாயுருவி சமூலத்தைத் துண்டு துண்டாக நறுக்கி, கொஞ்சங் கொஞ்சமாய்ப் போட்டு 4 ஜாமம் வறுக்க வங்கம் மடியும். இதனை ஆடாதோடைச் சாற்றாலும், கற்றாழைச் சாற்றாலும் அரைத்தரைத்து 21 புடங்களிட பஸ்மமாகும்.

(வேறு) வங்க பஸ்மம் (வைத்திய சிந்தாமணி)

வெள்வங்கத்தை மட்பாத்திரத்தி லிட்டுருக்கி, புளியம் பட்டை, அரசம் பட்டை இவைகளின் தூள் நான்கு பங்கு கொஞ்சங் கொஞ்சமாய்த் தூவித்தூவி, லோஹ தண்டத்தால் தேய்த்துத் தேய்த்து இரண்டு ஜாமம் வறுத்துப் பொடித்து, அதற்கு ஸமன் தாளகத்தைக் கூட்டி, புளிப்பு வர்க்கத்தால் அரைத்து வில்லை தட்டி யுலர்த்தி, ஓட்டிலிட்டுச் சீலைமண் செய்து, கெஜபுட மிடவும். பின்பதற்குப் பத்திலொரு பங்கு தாளகத்தைக் கூட்டி, முன்போல் அரைத்தரைத்துப் பத்து புடங்களிட வங்கம் நன்கு நீறும். தாளகத்தை புரசம் சாற்றால் அரைத்து வங்கத் தகட்டிற்குத் தடவி முன்போல் பத்து புடங்களிட பஸ்மமாகும். வெட்டை, ப்ரதரம், ப்ரமேகம், இருமல், மூலம் தீரும். சுவப்பன ஸ்கலிதத்தை நிறுத்தும். பலம், புஷ்டி, வீர்யம் தரும்.

நாக பஸ்மம் (ஆ. மு.)

சுத்தி செய்த கருவங்கத்தை இரும்பு வாணலியிலிட்டு உருக்கி, சமனெடை மனேசிலையைப் பொடித்துக் கொஞ்சம் கொஞ்சமாய்க் கிராஸம் கொடுத்து, பஸ்மமாகிற வரையில் ஆடாதோடைக்கம்பால் தேய்த்து வரவும். பின்பு அப்பொடியினைக் கல்வத்திலிட்டு நாலிலொன்று மனேசிலையைக் கூட்டி ஆடாதோடைச் சாற்றுலாவது, காஞ்சிகத்தினுலாவது அரைத்தரைத்து 16 புடங்களிட சுத்த பஸ்மமாகும். குஷ்டம், மேகம், குன்மம், வாதம், க்ஷயம், காசம் முதலான எல்லா நோய்களும் தீரும். இதனை வெள் வங்க பஸ்மத்தைப் போன்றும் தயாரிக்கலாம்.

முத்து பஸ்மம் (ரஸ ப்ரதீபிகை)

காடி, பழச்சாறு முதலிய ஆம்லவர்க்க ரஸம், கோமூத்திரம் இவைகளிலூறவைத்து உஷ்ணோதகத்தால் கழுவி ரவியிலுலர்த்தலே சுத்தி யென்க. சுத்தி செய்த முத்தை, வெள்ளைக் கண்டங்கத்திரிப் பழச்சாற்றி லூறவைத்து ரவியிலிட்டு உலர்த்தி, ஓட்டிலிட்டு மூடிச் சீலமண் செய்து முழுபுடம் போட பஸ்மமாகும். ராஜயக்ஷ்மா, சுவாசரோகம், நேத்திர ரோகம், விஷம் தீரும்.

ப்ரவாள பஸ்மம் (வைத்திய சிந்தாமணி)

எலுமிச்சம் பழச்சாற்றில் பவழத்தை ஒரு நாள் ஊற வைத்துப் பின்பு வெந்நீர்விட் டலம்பி உலர்த்திக் கொள்வதே பவழத்தின் சுத்தியாகும். சுத்தி செய்த பவழத்தை எருக்கம் பாலிலிட்டு மூன்று நாள் பாவனை செய்து கஜபுடமிட பஸ்மமாகும். ரக்த பித்தம், ரக்தாதி ஸாரம், ரக்த குன்மம், பித்த விகாரம், ஜ்வரம், கபம், இருமல் தீரும். தேன், நெய் அனுபானம்.

சுக்தி பஸ்மம் (ஆ. மு.)

சுக்தியை பவழத்தைப் போன்று சுத்தி செய்துக் கொண்டு, குமரிச் சாற்றாலரைத்து வில்லை தட்டி யுலர்த்தி ஓட்டிலிட்டு மூடிச் சீலை செய்து 50, 60 எருவில் புடம்போட பஸ்மமாகும். நெய், தேனில் 1, 2 குன்றி கொடுக்கலாம். சுவாஸாசயத்தைப் பலப்படுத்தும். இருமலைப் போக்கும். தீபன பாசனம் அதிகரிக்கும்.

சிருங்க பஸ்மம் (ஆ. மு.)

மான் கொம்பைச் சுட்டுக்கருக்கி, கற்றாழைச் சாற்றாலரைத்து வில்லை தட்டி யுலர்த்தி, பெரும்புடம் போட பஸ்மமாகும். 1, 2 குன்றியெடை நெய், தேனில் கொடுக்க மார்வலி, ஹிருதயப் படபடப்பு, இருமல், வெட்டை நீங்கும். ஹிருதயத்தைப் பலப்படுத்தும்.

சங்க பஸ்மம் (ஆ. மு.)

பழச்சாற்றில் முன்போல் சுத்தி செய்து 50, 60 எருவில் புடமிட பஸ்மம். இது பரிணாம சூலையையும், ப்லீஹாபிவிருத்தியையும் போக்கும். தீபன பாசனத்தை விர்த்தி செய்யு மென்க. சீனி, நெய், தேன், திரிகடு முதலியவைகள் அநுபானங்களாகும்.

வராடிக பஸ்மம் (ஆ. மு.)

பழச்சாற்றிலூறவைத்தலே சுத்தி. இதனை ஒரு குடுவையிலிட்டு மிதக்கப் பழச்சாறு பிழிந்து அகல் மூடி, சீலைமண் செய்து முழுபுடமிட பஸ்மமாகும். நீரடைப்பு, வெட்டை, அக்கினி மந்தம் போக்கும். காதிலிட்டுப் பழச்சாறு பிழிய கர்ண சூலை தீரும்.

அரிஷ்டங்கள்.

அபயாரிஷ்டம் (பைஷஜ்ய ரத்நாவளி)

கடுக்காய்த்தோல் 100 பலம், திராக்ஷை 50 பலம், வாய் விடங்கம் 10 பலம், இலுப்பைப்பூ 10 பலம், இவைகளை யிடித்துப் பொடித்து 4 துரோண ஜலத்திலிட்டு, 1 துரோண மாய்ச் சுண்டக்காய்ச்சி, ஆறிய பின்பு பிசைந்து வடிகட்டி வெல்லம் 1 துலாம் கரைத்து, அதில் நெருஞ்சில், சிவதை, தும்மட்டிக்காய், காட்டாத்திப்பூ, செவ்வியம், அதிமதுரம், சுக்கு, தந்திபீஜம், இலவம்பிசின் வகைக்குப் பலம் 2 பொடி செய்துத் தூவி, மேல்சட்டி மூடிச் சீலமண் செய்து 1 மாதம் வைத்திருந்து, மது வாசனை ஏற்பட்ட பிறகு பிரித்து வடி கட்டி வைத்துக்கொள்ளவும். இது மூல ரோகம், உதர ரோகம், மலபந்தம், நீர்க்கட்டு முதலியவைகளைப் போக்கி தீபனத்தை விர்த்தி செய்யும். கோஷ்ட பலத்தையும், வந்நி பலத்தையும் வயதையு மனுசரித்து மருந்தினளவைக் கூட்டி யும் குறைத்து முபயோகித்தல் வேண்டும்.

கிராதாரிஷ்டம் (ஆ. மு.)

நிலவேம்பு பலம் 40, இடித்துப்பொடித்து மட்பாண் டத்திலிட்டு 8 மடங்கு ஜலம் விட்டு நாலிலொன்றாய்ச் சுண் டக்காய்ச்சி, ஆறியபின் பிசைந்துப் பிழிந்து வடிகட்டி வெல் லம் பலம் 40 கரைத்து, தேன் பலம் 8 கலந்து, நிலவேம்பு, பஞ்சகோலம் இவ்வாறும் வகைக்குப் பலம் 4 பொடித்துத் தூவி, கிருத பாண்டத்திலிட்டு மூடி, ஒரு மாதம் தான்யராசி யில் வைத்தெடுத்து வடிகட்டி யுபயோகிக்க அஷ்டவகை ஜ்வரங்கள் தீரும். கால், அரை அவுன்ஸ் காய்ந்தாறிய ஜலத் துடன் கலந்து தினம் 2, 3 வேளை யுபயோகிக்கலாம். விஷம ஜ்வரத்திலிதனையுட் கொண்டுவர அதனைப் பற்றறப் போக்கும்.

அர்க்கங்கள்.

கர்ப்பூராரிஷ்டம் (ஆ. மு.)

ஓமத்திற்கு நான்கிலோர் பாகம் கர்ப்பூரத்தைப் பொடித்துக் கலந்து எட்டுமடங்கு ஜலம் விட்டு 3 நாளூறிய பின் வாலையிலிட்டுத் திராவகமிறக்கி வைத்துக்கொள்க. இத்திராவகத்தையே கர்ப்பூராரிஷ்டமென கவர்ன்மெண்ட் இண்டியன் ஸ்கூலில் வழங்குகின்றனர். $\frac{1}{4}$, $\frac{1}{2}$ அவுன்ஸ் வீதம் ஜலத்தில் கலந்துக் கொடுக்க அஜீர்ணம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, வாந்தி, பேதி, கிருமி, தொண்டைக் கம்மல், ஜலதோஷம், ஜ்வரம் விஷூசி தீரும்.

சங்கத் திராவகம் (யோக ரத்நாகரம்)

வெடியுப்பு 4 பலம், நவாசாரம் 2 பலம், யவாக்ஷாரம் 2 பலம், இந்துப்பு 1 பலம், படிகாரம் 1 பலம், அன்னபேதி $\frac{1}{2}$ பலம் இவைகளைப் பொடித்து கண்ணாடி அல்லது மண்வாலையி லிட்டுத் திராவக மிறக்கிக்கொள்க. இதனை இலந்தை விறகா லெரிப்பது உத்தமம். வயது, தேகம், வியாதி இவைகளின் பலாபலத்திற்குத் தக்கவாறு 2 முதல் 10 துளிகள் வரையில் சுத்த ஜலத்தில் கலந்துக்கொடுக்க குல்மம், சூலை, உதர ரோகம், ஜ்வரக்கட்டி, சூதக வாய்வு, வாந்தி பேதி முதலிய வநேக நோய்களைக் கண்டிக்கும். இதனை 3, 5, 7 தினங் களுக்குமேல் உபயோகித்தல் கூடாது. அவசியமானல் சில தினங்கள் கழித்து உபயோகித்தல் வேண்டும்.

நேத்ரௌஷதங்கள்.

சந்திரோதய வர்த்தி (பைஷஜ்ய ரத்நாவளி)

கடுக்காய்த்தோல், வசம்பு, கோஷ்டம், திப்பிலி, மிளகு, தாணிக்காய்த்தோல், சங்கநாபி, மனேசிலை இவைகளைச் சமனெடையாய்ச் சூர்ணித்துச் சேர்த்து வெள்ளாட்டுப் பால் விட்டரைத்து, திப்பிலி போன்ற மாத்திரைகள் செய்து நிழலி லுலர்த்தி வைத்துக்கொள்க. இதனைக் கண்ணில் தீட்டிவர நயனரோகம் 96-ம் தீரும்.

சித்த நாகார்ஜுன வர்த்தி (பைஷஜ்ய ரத்நாவளி)

திரிபலை, திரிகடு, இந்துப்பு, அதிமதுரம், துத்தம், ரஸாஞ்ஜனம், தாமரைப்பூ யிதழ், வாய்விடங்கம், லோத்திரப் பட்டை, தாம்பர அரப்பொடி இப்பதினன்கையும் சமனுய்க் கூட்டி மழை ஜலத்தால் மைபோலரைத்து மெல்லிய வர்த்திகள் செய்து, நிழலிலுலர்த்தி வைத்துக்கொள்ளவும். முலைப் பால், தேன், பாதிரியிலை அல்லது புஷ்பச்சாறு, நந்தியாவட்டைப் பூச்சாறு, லோத்திர கஷாயம், திரிபலை கஷாயம், வெள்ளாட்டு மூத்திரம் அல்லது பால் முதலிய வனுபான பேதங்களில் உரைத்துக் கண்ணிலிட்டு வர திமிரம், படலம், காசம், தாஹம், தாபம், பொங்கல், பீளை சார்தல், சதைவளர்ச்சி, பூவிழுதல் முதலிய பற்பல நேத்திர ரோகங்கள் குணமாகும்.

கருடாஞ்சனம் (வெ. மு.)

சுத்தி செய்த காரீயம், ரஸம், தாம்பரப்பொடி, அயப் பொடி, மஞ்சள் நிறச்சோழி, கடல்நுரை, மண்டை ஓடு, அஞ்சனக்கல், மயில் துத்தம், பொரித்த படிகாரம், பொரித்த வெங்காரம், ஸைந்தவ லவணம் பச்சைக்கர்ப்பூரம், தேற்றாங்

கொட்டை, கோரைக்கிழங்கு, திரிபலே, திரிகடு, அதிமதுரம், கடுகுரோஹணி வகைக்குப் பலம் ஒன்று. முதலில் காரீயத்தை யுருக்கி அதில் ரஸத்தைக் கலந்து வெட்டையாக்கிக் கல்வத்திலிட்டு நன்கு பொடித்து, தாம்பரப் பொடி, அயப் பொடி, சோழி, கடல்நுரை இவைகளே வரிசைக் கிரமமாய்ப் போட்டு நன்கு அரைத்து கடைச்சரக்குகளேயும் இடித்துச் சூர்ணித்துச் சேர்த்து புங்கம்பட்டைச் சாறுவிட்டு 10 நாள் நன்கு அரைத்து திப்பிலிப் பிரமாணம் மாத்திரை செய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொள்ளவும். இதனை தேன், பன்னீர் முதலிய வனுபானங்களில் உரைத்துக் கண்ணிலிட படலம், பூ, பில்லம், காசம், திமிரம், லிங்க நாசம் இவைகளேப் போக்கி பார்வை சக்தியைப் பலப்படுத்தும்.

சந்தனதி வடி (வெ. மு.)

சந்தனம், செஞ் சந்தனம், அவலருக்கு, தேற்ருங் கொட்டை, பீத ரோஹிணீ, ஜாதிமல்லிகை மொட்டு, காவிக் கல் வகைக்கு ½ பலம் இவைகளே யிடித்துச் சூர்ணித்து கல்வத்திலிட்டு சுத்த ஜலம் விட்டரைத்து மாத்திரை செய்து நிழலில் உலர்த்திக்கொள்க. இதனை முலேப்பால், பன்னீர் இவைகளில் உரைத்துக் கண்ணிலிட, உஷ்ணுதிகத்தினுலுண்டாகும் கண் வலி, இமை வலி, கண்ணில் நீர் வடிதல் இவைகளே நீக்கும்

ஸுநேத்ரீ (வெ. மு.)

சுத்தி செய்த சுருள் துத்தம், பீத ரோஹிணீ வகைக்கு விராகனெடை ஒன்று, வசம்பு, அஞ்சனக்கல், காவிக்கட்டி, சந்தனத்தூள், ரத்த சந்தனம், அவலரக்கு, மரமஞ்சள், பாச்சோத்திப்பட்டை வகைக்கு விராகனெடை இரண்டு, கரும்பு

வேர், ஸ்படிகமணி, அதிமதுரம், சுத்தி செய்த தாம்பரப் பொடி, சங்கு வகைக்கு விராகனெடை மூன்று, திரிகடு, திரிபலை, வாலுளுவை, புங்கங்கொட்டை, வாய்விளங்கம் வகைக்கு விராகனெடை நான்கு. இந்த எல்லா சரக்குகளையும் இடித்துச் சூர்ணித்துக் கல்வத்திலிட்டு புங்கம் வேர் கஷாயத்தால் நன்ருய் அரைத்து மாத்திரைகள் செய்துலர்த்தி வைத்துக் கொள்க. இதனை முலைப்பால் முதலிய வனுபானங்களில் உரைத்துக் கண்ணிற் றீட்ட கண்களிலும், இமைகளிலும் உண்டாகின்ற நமைச்சல், புண், பில்லம் இவைகளை நீக்கும்.

பச்சை மாத்திரை (வெ. மு.)

சுத்தித்த தாம்பரப்பொடி, முள்ளிவேர், அதிமதுரம், இந்துப்பு வகைக்கு 1 பலம் இவைகளைச் சூர்ணித்துக் கல்வத்திலிட்டு நெல்லிக்காய்ச் சாறு அல்லது நெல்லிவற்றல் கஷாயம் விட்டரைத்து புதிதான செம்பு பாத்திரத்தின் உட்புரத்தில் மெல்லியதாகப் பூசி வைக்கவேண்டும். பின்பு யவை, நெல்லி யிலை இவைகளை யிடித்துக் கொஞ்சம் நெய் கலந்து தணலில் போட்டு, அந்தப் புகையினல் மேற்படி மருந்தை தூபம் காட்டவும். மருந்து பச்சை நிறமாகிற வரையில் தூபம் போடவேண்டும். பிறகு மருந்தை பாத்திரத்திலிருந்து எடுத்து கல்வத்திலிட்டு, நெல்லிவற்றல் கஷாயம்விட்டரைத்து மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொள்ளவும். இதனைப் பன்னீர் முதலிய வனுபானங்களிலுரைத்துக் கண்ணிலிட கண்களின் தாபிதத்தையும், பூவையும் போக்கும்.

விமலைக் குளிகை (வெ. மு.)

மிளகு 2, திப்பிலி 2, கடுக்காய் 3, தாணிக்காய் 3, நெல்லி முள்ளி 3, அதிமதுரம் 4, மரமஞ்சள் 4, வெள்ளை லோத்ரப்

பட்டை 6, பச்சைக் கர்ப்பூரம் 8, பீத ரோகிணி 10 பங்குக ளாகக் கூட்டிப் பன்னீர் விட்டரைத்து திப்பிலிபோல் மாத் திரை செய்துக்கொள்ளவும். இதனை தேன், முலைப்பால், பன்னீர் முதலிய வனுபானங்களி லுரைத்துக் கண்ணில் தீட்டிவர கண்ணீர் வடிதல், கண் கூசல், பார்வை மங்கல் முத லியவைகளைப் போக்கும். இம்முறையிலுள்ள பத்து சேர்மா னங்களையும் சமனெடையாய்க் கூட்டிச் செய்ய வேறு நூல் கள் கூறும்.

தாம்பர ரூஜன் (வெ. மு.)

அதிமதுரம் $1\frac{3}{4}$ பலம், கோஷ்டம் $1\frac{1}{2}$ பலம், வசம்பு $1\frac{1}{4}$ பலம், இந்துப்பு 1 பலம், திப்பிலி $\frac{3}{4}$ பலம், சுத்தித்த தாம்பரப் பொடி பலம் 2, சுத்தி செய்த வெள்ளிப்பொடி $\frac{1}{2}$ பலம், தங்க ரேக்கு $\frac{1}{8}$ பலம், தாம்பரப்பொடி, வெள்ளிப்பொடி, தங்க ரேக்கு இவைகளை முறைப்படி கல்வத்திலிட்டு ஆட்டுப்பால் விட்டுநன்றாய் அரைத்துப் பின்னர் கடை சரக்குகளையும் சூர் ணித்துக் கூட்டி, நன்றாய் அரைத்து திப்பிலிப் பிரமாணம் மாத்திரை செய்து உலர்த்தி வைத்துக்கொள்க. இதனை முலைப்பால், தேன், பன்னீர், நந்தியாவட்டைப் பூச்சாறு இவைகளில் உரைத்துக் கண்ணிலிட கண்ணில் நீர் வடிதல், சதை வளர்ச்சி, பூவிழுதல், படலம், திமிரம், மாலைக்கண் இவைகளைப் போக்கும். சகலவிதமான நேத்திர ரோகங்களி லும் உபயோகிக்கத் தக்க ஓர் சிறந்த ஔஷதம்.

நேத்ர பிந்து (ஆ. மு.)

ஒரு தோலா படிகாரத்தை 16 தோலா பன்னீரில் கரைத்து வைத்துக்கொண்டு 4, 5 துளிகள் கண்ணிலிட்டு வர உஷ்ணாதி க்கத்தினால் உண்டாகும் கண் நோய், கண் சிகப்பு, பீளை சார்தல்,

கண்ணெரிவு, கண்ணீர் வடிதல் முதலிய பிணிகள் தீரும். இதனை ஸ்படிகத் திராவகமெனவும் கூறுவர்.

நாரி கேளாஞ்ஜனம் (ஆரோக்ய கல்பதரு)

இளநீர் 6 படியில் மரமஞ்சள், திரிபலை, அதிமதுரம் வகைக்குப் பலம் 2, இடித்துப் போட்டு 16-ல் ஒரு பங்காகச் சுண்டக்காய்ச்சி, ஆறினபின் பிசைந்து வடிக்கட்டி அதில் இந்துப்பு, பச்சைக் கர்ப்பூரம் வகைக்குப் பலம் ½ பொடித்துப் போட்டு, கஷாயத்திற்கு நாலிலொருபாகம் தேன் கூட்டி குழம்பு பதமாய்க் காய்ச்சி வைத்துக்கொள்ளவும். இதை கண்ணிலிட பற்பல நேத்திர ரோகங்கள் தீரும்.

லேபங்கள்.

ஹிங்குள லேபம் (ஆ. மு.)

லிங்கம் தோலா 1 கல்வத்திலிட்டு மைபோலரைத்துப் பசுவெண்ணெய் தோலா 20 கூட்டி, நன்கு உறவாகும் வரையிலரைத்து எடுத்து வைத்துக்கொள்க.

பாததாரி லேபம் (வெ. மு.)

தேன் மெழுகு பலம் 6, தேங்கா யெண்ணெய் பலம் 8 சேர்த்துருக்கி ஈய லிங்தூரம் பலம் 1½ தூவிக்கலந்து எடுத்து வைத்துக்கொண்டு பூசி வர பித்த வெடிப்பு, வெட்டு காயம், ரணங்கள் தீரும். இதனை மதூச்சிஷ்டாதி லேபமெனவும் வழங்குவர்.

ஸத்யோவிரணஹர லேபம் (வெ. மு.)

வெள்ளைக் குங்கிலியம் 4 பங்கு, நெய் 1 பங்கு கூட்டி யுருக்கி வைத்துக்கொண்டு பூசி வர நெருப்புப் பட்ட ரணங்களும், சாதாரண புண்களும், வேறு ரணங்களும் தீரும்.

Ayurvedacharya
Atreyashrama
28. Tennur Road
Tiruchirapalli

திரிபலா லேபம் (வெ. மு.)

கடுக்காய், தாணிக்காய், நெல்லிக்காய், இம்மூன்றையும் சமனெடையாய்ச் சட்டியிலிட்டு மூடி எரித்துக் கருக்கியபின் பொடித்து, நெய் விட்டரைத்து வைத்துக்கொண்டுப் பூச பற்பல ரணங்களாறும்.

பப்பூல கபலீ (ஆ. மு.)

வேலம்பட்டை ரஸக்ரியை 2 பங்கு, பொரித்த படிகாரம் 1 பங்கு கூட்டியரைத்து வைத்துக்கொள்ளவும். இதனை ரண சோதனமாயும், ரண ரோபணமாயும் பூசலாம்.

ஸுரதாரு லேபம் (ஆ. மு.)

நவாச்சாரம், தேவதாரு, சுக்கு, முருங்கைப் பட்டை சமன் கூட்டி கோமூத்திரம் அல்லது பழச்சாற்றாலரைத்துப் பூச வீக்கம், கட்டி இவைகளைக் கண்டிக்கும்.

அவல் குஜாதி லேபம் (ஆ. மு.)

கார்போகவரிசி, நீரடி முத்துப்பருப்பு, சரக்கொன்னை இலை வகைக்கு 1 பங்கு, மஞ்சள் ½ பங்கு, தாளகம் ½ பங்கு இவ்வைந்தினையும் தனித்தனியாய்ப் பொடித்துக் கோமூத்திரம் விட்டரைத்து லேபம் செய்யச் சொறி, சிரங்கு, படை, ஊறல் தீரும்.

துவரக லேபம் (ஆ. மு.)

நீரடி முத்துப்பருப்பை தேவையான தேங்கா யெண்ணெய் விட்டரைத்து கோமூத்திரம் அல்லது மோரில் குழப்பிப் பூச சொறி, சிரங்கு, நமை தீரும்.